பக்கங்கள்: பத்து

Registered as a News paper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆனி 04 வெள்ளிக்கிழமை [18-06-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 175

# 2 எலும்புக் கூடுகள் நேற்று மீட்கப்பட்டன!

## மீட்கப்பட்ட எலும்புகள் பொலீஸ் நிலையத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 18

செம்மணியில் மேற்கொள்ளப்பட்ட முதலாம் கட்டத் தோண்டுதல் பணியில் மீட்கப்பட்ட இரு எலும்புக் கூடுகள் இன்று காலை 9-30 மணி முதல் யாழ். பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கும் என்று யாழ். மேலதிக நீதிவானும் மன்னார் மாவட்ட நீதிபதியும் மன்னார் மேலதிக நீதிவானுமாகிய எம். இளஞ்செழியன் தெரிவித்தார்.

காணாமல் போனோரின் பாதுகாவலர் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் அதன் உறுப்பினர்களும் அங்கு சென்று

[10 ஆம் பக்கம் பார்க்க]

## புதைகுழி தோண்டும் பணி இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

செம்மணியில் மனிதப் புதைகுழி தோண்டும் பணிகள் நேற்று இரண்டாவது நாளாக இடம்பெற்றபோது இரு மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன. இவை மீட்கப்பட்டதுடன் புதைகுழி தோண்டும் பணி இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

செம்மணி - நல்லூர் வீதியில், உப்பளத்துக்கு அருகில் லான்ஸ் கோப்ரல் சோமரத்தின ராஜபக்ஷ அடையாளம் காட்டிய மனிதப் புதைகுழியில் இருந்தே நேற்று இரு மனித எலும்புக் கூடுகளும் மீட்கப்பட்டன.

செம்மணிப் பிரதேசத்தில் உள்ளதாகக் கருதப்படும் மனித புதைகுழிகளைத் தோண்டும் நடவடிக்கையின் முதல் கட்டமாக கிருஷாந்தி குமாரசாமி பாலியல்கொலை வழக்கின் மரணதண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்தின ராஜபக்ஷ மனித புதைகுழியை அடையாளம் காட்டுவதற்காக

[10 ஆம் பக்கம் பார்க்க]



செம்மணிப்பகுதியில் தோண்டப்பட்ட மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எலும்புகளின் ஒரு தொகுதியைப் படத்தில் காணலாம்.
படம் எஸ். மணிவண்ணன்

## மழை காலத்துக்கு முன் புதைகுழி தோண்டும்பணி பூர்த்தியாகவேண்டும்

### மேலதிக நீதிவான் நேற்று உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன் 18

செம்மணிப் பிரதேசத்தில் உள்ளதாகக் கூறப்படும் சகல மனித புதைகுழிகளையும் தோண்டும் பணியை அடுத்த மழை காலத்துக்கு முன்னர் பூர்த்தி செய்ய ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று யாழ். மேலதிக நீதிவான் எம். இளஞ்செழியன் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கும் உத்தரவு பிறப்பித்தார்.

செம்மணிப் பிரதேசத்தில் மனித புதைகுழிகளைத் தோண்டும் பணிகளில் முதற் கட்டம் நேற்று பிற்பகல் 2-15 மணியளவில் பூர்த்தியானதையடுத்து, அங்கு நீதிமன்றம் கூடிய சமயம் நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

புதைகுழியைத் தோண்டும் பணியை மேற்கொண்ட சட்ட மருத்துவத்துறை நிபுணர் சந்திரசிறி நெரியல்ல, மண்ணியல் நிபுணர் கே. ஏ. நந்தசேன, இரசாயனப்புரி

[10ஆம் பக்கம் பார்க்க]

## எலும்புக் கூடுகளில் ஒன்று கைகள் கட்டப்பட்ட நிலையில்

யாழ்ப்பாணம், ஜூன் 18

செம்மணியில் நேற்று மீட்கப்பட்ட இரு எலும்புக் கூடுகளில் ஒன்றின் கைகள் இரண்டும் சேர்த்துக் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டன. கண்களும் சேலைத்துண்டால் மூடிக்கட்டப்பட்டிருந்தன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இ. தொ. கா. பேரணி கைவிடப்பட்டது

கொழும்பு, ஜூன் 18

வீரவிதான அமைப்புக்கு எதிராக இ. தொ. காவின் ஏற்பாட்டில் இன்று கொழும்பில் நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டப் பேரணி ரத்துச்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## குற்றம்இழைத்தபடை அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்

### அரச சட்டத்தரணி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 18

செம்மணியில் மனித புதை குழியில் மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள் தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர். குற்றம் இழைத்ததாக இனங்காணப்படும் படை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த அரச சட்டத்தரணி யசந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் - தீவுப்பகுதி விரைவில் பாதைச் சேவை

### 150 பேர் செல்ல முடியும்

யாழ்ப்பாணம், ஜூன் 18

மன்னாருக்கும்—ஊர்காவற்றுறைக்கும் இடையில் பயணிகள் பாதைச் சேவை (FERRY) ஒன்றை நடத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

மன்னாருக்கும் — கற்பிட்டிக்கும் இடையில் சேவையில் ஈடுபட்ட — 150 பயணிகள் செல்லக்கூடிய 'ரமோனா' என்ற பாதையே இந்தச் சேவையில் தினமும் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தனியார் ஒருவரால் நடத்தப்படவுள்ள இந்தச் சேவை விரைவில் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(இ-3-164)



இது வழமையான சரணாகதி தான்...!

## அத்தியாவசிய சேவையாக பிரகடனம்

கொழும்பு, ஜூன் 18

சுகாதார, வைத்தியசேவைகள் உடனடியாக அத்தியாவசிய சேவைகளாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க நேற்று மாலை விடுத்த

[10 ஆம் பக்கம் பார்க்க]

## 2பொலீஸ்கான்ஸ்டபிள்கள் செங்கலடியில் பலி!

மட்டக்களப்பு, ஜூன் 18

மட்டக்களப்பு—செங்கலடியில் விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை நடத்திய தாக்குதல் ஒன்றில் 2 பொலீஸ் கான்ஸ்டபிள்கள் உயிரிழந்தனர்; ஒருவர் காயமடைந்தார்.

செங்கலடிப் பொலீஸ் காவல் நிலையத்துக்கு முன்பாக உள்ள வீதிச் சோதனைச் சாவடி மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

சுமார் 10பேர் அடங்கிய விடுதலைப்புலிகள் குழுஒன்றே

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## செல்லச்சாமி இராமநாதன் செட்டியார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று தவிர்க்க முடியாத காரணத்தால் நடைபெறவில்லை.

இறுதிக்கிரியைகள் இன்று 18-06-99 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளையார் விலாஸ்
அப்பள உரிமையாளர்கள்

148, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/7934)

## பூதப்பிள்ளை மகாலிங்கம்

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும்கொண்ட பூதப்பிள்ளை மகாலிங்கம் அவர்கள் 17-6-99 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் (கனடா) அன்புக் கணவரும் மங்களேஸ்வரன் (கனடா), தங்கேஸ்வரன் (கனடா), மகாஈசன் (லண்டன்), மதிவண்ணன் (கனடா), மகாநிதி (இந்தியா), மகாநேரு (இந்தியா), மகாலஷ்சுமி (கனடா), மகாராணி (கனடா), மகாராஜன் (கனடா), மகாஜெயா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19-6-99) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
க, ஐயுகம், பூ. மகாதேவன்

கனால் வீதி,
மாதகல்.
(66704)

## தம்பையா இராசையா

யாழ். கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா இராசையா அவர்கள் 17.06.99 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா, செல்லம் தம்பதிகளின் அன்புமகனும், புவனேஸ்வரியின் அன்புக்கணவரும், செல்வராஜா, யோகராஜா, தவராஜா (பிரான்ஸ்), சுசீலா ஆகியோரின் அன்புத் தந்தையும், விமலா, ரதி, கனகசபை(இலங்கைவங்கி), ஆகியோரின் மாமனாரும் நிசாந்தன், காயத்திரி, கஜேந்தினி, கஸ்தூரி, தீபிகா ஆகியோரின் அன்புப் பேரனாரும், காலஞ்சென்ற சிவசாமி, துரைசாமி (கனடா), தம்பிராஜா (கொழும்பு), இராசதுரை (கனடா), திருமதி அன்னலட்சுமி (கண்டி), திருமதி தர்மபூபதி (கொழும்பு), திருமதி மங்கயர்க்கரசி (கொழும்பு), திரு சிவராஜா (பிரான்ஸ்), திருமதி பங்கயமலர் (லண்டன்), சர்வானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின்இறுதிக் கிரியைகள் இன்று (18.06.99) வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் இல. 374, கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. கனகசபை
(மருமகன்)

374, கச்சேரி, நல்லூர் வீதி,
நல்லூர்.
(66695)

## திருமதி சின்னத்தங்கம் இளையதம்பி

சிறுப்பிட்டி மேற்கைச் சேர்ந்த திருமதி சின்னத்தங்கம் இளையதம்பி அவர்கள் 17—6—99 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பியின் அன்பு மனைவியும் தனபாக்கியம், பொன்னம்பலம் [U.K], காலஞ்சென்ற தனலக்ஷ்மி [ஓய்வுபெற்ற ஆசிரியை, இணுவில் இந்துக் கல்லூரி], பாலசிங்கம் [பிரதம லிகிதர், இலங்கை, மின்சார சபை-யாழ்ப்பாணம்], சுப்பிரமணியம் [இ.போ.ச. வட்டார கணக்காளர் காரியாலயம், கோண்டாவில்], அன்னம்மா [கொழும்பு], பூமணி, இராசமணி [வலி. கிழக்கு பிரதேச சபை, அச்சுவேலி] ஆகியோரின் அன்புத் தாயாரும் மார்க்கண்டு, திருநாவுக்கரசி [U.K], கதிர்காமதாசன் [ஓய்வு பெற்ற ஆசிரியர், இணுவில் இந்துக் கல்லூரி], பராசக்தி, மகேஸ்வரி பாலச்சந்திரன் [U.K], இராசேந்திரசிங்கம், மகாலிங்கம் [சாலைப் பரிசோதகர் இ.போ.ச] ஆகியோரின் அன்பு மாமியாரும் வே. இராசமலர், ந. புஸ்பமலர் [கனடா], குகனேஸ்வரன் [கனடா], கணேஸ்வரன் [கனடா], Dr. சுமதி [U.K], ரங்கன் [பொறியியலாளர்—U.K], கண்ணன் [கனடா], ஜெ. லலிதாம்பிகை [நெதர்லாந்து], யோகநாயகி, ராதிகா, அகிலன் [U.K], க. அங்கையற்கண்ணி [நோர்வே], அனிதா, அகல்யா, லோஜன், துசிதா, தீபன் [U.K], தீபா, அனிசா, சாந்தி, சிந்துஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சுதன், சுதாஜினி, சுபாஜினி, நதிபன், நருபன் [கனடா], விதுரன், அருண் [நெதர்லாந்து], ஜெயகிருஷ்ணா [U.K] ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று [18-6-99] வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. பாலசிங்கம்
இ. சுப்பிரமணியம்

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.
(66708)

## பதிவு செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 18

அரச கரும மொழிகள் திணைக்களத்துக்கு நேர்முகப் பரீட்சைக்காகச் சென்ற வேலையற்ற பட்டதாரிகள் யாழ்ப்பாணம் திரும்பிய பின்னர் தமது பெயர் விவரங்களை யாழ். செயலகத்தில் பதிவு செய்யாவிடில் தமது பெயர் விவரங்களை யாழ். செயலகத் திட்டமிடல் பகுதியில் பதிவு செய்யுமாறு உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-6)

## கல்வி உபகரணம் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 18

வடமராட்சிக் கல்வி வலயத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மிகவும் வறிய நிலையிலுள்ள — இடம்பெயர்ந்து சென்ற பின்னர் அண்மையில் யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிய — மாணவர்களுக்கு 'யுனிசெவ்' உதவித் திட்டத்தின் கீழ் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வின் முன்னேற்பாடாகத் தமது வலயத்துக்கு உட்பட்ட சகல அதிபர்களையும் குறித்த மாணவர் பற்றிய விவரங்களுடன் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30மணிக்கு வலயக் கல்விப் பணிமனைக்குச் சமுகமளிக்குமாறு கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராஜா கேட்டுள்ளார். (இ-7)


நினைவூட்டுகின்றோம்...
இன்னும் 50 நாள்களே!
**புலமைப்பரிசில் 1999**
மாதிரிப் பரீட்சை
நாளையும் (19-06-99)
நாளை மறுநாளும் (20-06-99)
2 பரீட்சை நடைபெறும்.
**BOND**
யாழ்ப்பாணம்.
(66703)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
முரளி, சூர்யா,
ஜிவிதா, ராதிகா
நடித்த
**காதலே நிம்மதி**
காட்சிகள் 11.00, 2.30
[புதிய நேரம்]
[63702]

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி
அருண்பாண்டியன்
மௌலிசா
**ரவுடி வம்சம்**
காட்சிகள் 10.30, 2.30
(பழைய நேரப்படி)
Fax No. 070- 212223
FOREIGN T. P. NO-
0094 - 70 - 212223
(66667)

**ராஜா**
யாழ்ப்பாணம்
விஜய், தேவயானி,
ரம்பா, மணிவண்ணன்,
செந்தில்
மற்றும் பலர் நடித்த
**நினைத்தேன் வந்தாய்**
10.30, 2.30
[சி/7862]


## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ். மாநகர சபையால் இயங்கும் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் இந்து பெண்கள் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

யாழ்.மாநகர சபை பதில் செயலாளர் சி. மா. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் இவ் விளையாட்டுப் போட்டி நிகழ்விற்கு யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ.வி கிருஷ்ணசாமி பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (ஐ-4)

## மாதகல் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த பெருவிழா

நாளை 19-06-99 சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு வழிபாடு இடம்பெற்று 20-06-99 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணி (பு. நே.) திருநாள் திருப்பலியும் திருச்சுரூபப் பவனியும் இடம்பெறும்.

ஆலய நிர்வாகம்

(66710)

## பாராட்டிக் கௌரவித்தல்

தர்மசாஸ்தா குருகுல அதிபர்
சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்
மிருதங்க வித்துவான் கலாபூசணம் திரு.க.ப.சின்னராசா
நாதசுர வித்துவான் திரு. இ. கேதீஸ்வரன்

ஆகிய பெருமக்களின் நீண்டகால சேவையைக் கருத்திற் கொண்டு அவர்களைப் பாராட்டிக் கௌரவித்து விருது வழங்கும் விழா மேற்படி தேவஸ்தான இசையரங்கில் 28-06-99 திங்கட்கிழமை நிகழவுள்ளது. இதிற் பங்கு கொண்டு கௌரவிக்க விரும்பும் அன்பர்கள் பாலர் ஞானோதய சபைத் தலைவர் அல்லது செயலாளர் ஆகியோரில் ஒருவருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பாலர் ஞானோதய சபை,
காசிவிநாயகர் தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.
[66714]

## கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலையின் முதலாம் வருட
வர்த்தக நெறியைச் சேர்ந்த
ஆசிரிய மாணவன்
திரு. செ. முரளிமோகனின்
தந்தையாரும்
கலாசாலை விரிவுரையாளர்
திரு. இ. மருதலிங்கம்
அவர்களின் மாமனாருமாகிய

### கதிரேசு செல்லையா

அவர்கள் அமரத்துவமடைந்தமையையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாணவர் மன்றம்
பலாலி ஆசிரிய கலாசாலை
திருநெல்வேலி,

(66701)

## மரண அறிவித்தல்

### வஸ்தியாம்பிள்ளை யோசவ் பீற்றர்

[ஓய்வுபெற்ற அரச மொழி பெயர்ப்பாளர்]

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் இல. 1, சோமசுந்தரம் அவனியு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட B.J. பீற்றர் 13-06-99இல் காலமாகிவிட்டார்.

அன்னார் யோசப்பின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பாண்டியன்தாழ்வு வஸ்தியாம்பிள்ளை யோசவ் [இராசையா], ஞானம்மாவின் அன்பு மகனும் நாரந்தனையைச் சேர்ந்த காலஞ்சென்ற மனுவேற்பிள்ளை [முத்துதம்பி வியாங்கொடை] றோசம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், அருள் திரு.பிரான்சிஸ் சேவியர் [குட்டி சேவியர் கனடா], B.J. வின்சன்ட் [முன்னைநாள் உதவிப் பொது முகாமையாளர் இலங்கை வங்கி] ஆகியோரின் அன்புச் சகோதரனும், புனிதவான் [கனடா], அருட்நந்தை இளங்கோ, பீற்றர் [கிளாறெபின் சபை -ஜேர்மனி], இன்பவளன் [கனடா], ஞானவளன் [ஆஸ்திரேலியா], றதி ஆகியோரின் அன்புத் தந்தையும், றுக்கி [கனடா]யின் அன்பு மாமனாரும், ஆன், சேரன், மைகல் அமிர்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல: 1, சோமசுந்தரம் அவனியு இல்லத்திலிருந்து நாளை [19-06-99] சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலியின் பின்பு புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. ச. அன்ரனிப்பிள்ளை
[டயானி இன்டஸ்றீஸ்]

இல: 1, சோமசுந்தரம் அவனியு,
சுண்டுக்குளி.
T.P NO- 2058
[66713]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்க அதிபராக தாபோ பேகி பதவியேற்பு!

பிரிட்டோரியா, ஜூன் 18

தென்னாபிரிக்காவின் இரண்டாவது கறுப்பின அதிபராக தாபோ பேகி (Thabo Mbeki) நேற்று முன்தினம் பதவியேற்றார்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க யூனியன் கட்டடத்தில் இடம்பெற்ற பிரமாண்டமான ஒரு வைபவத்தில் லட்சக்கணக்கான மக்கள் முன்னிலையில் நெல்சன் மண்டேலாவிடம் இருந்து அவர் அதிகாரத்தைப் பொறுப்பேற்றார்.

தென்னாபிரிக்காவின் முதலாவது கறுப்பின அதிபர் நெல்சன் மண்டேலா இந்த வைபவத்தில் வைத்து நாட்டு மக்களிடம் விடைபெற்றார்.

120 க்கும் மேற்பட்ட உலக நாடுகளின் தலைவர்கள் மற்றும் தேசிய பிரதிநிதிகள் இந்த வைபவத்தில் கலந்து, கொண்டனர்.

பதவியேற்ற பின்னர் தாபோ பேகி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உணர்ச்சி பூர்வமான உரையில் அரசியல் களத்தில் இருந்து விலகிச் செல்லும் முன்னாள் அதிபர் மண்டேலாவையும் அவரது தலைமுறையினரையும் வெகுவாகப் புகழ்ந்து பேசினார்.

தென்னாபிரிக்காவில் நிறவெறி ஆட்சி முடிவுக்கு வந்ததை அடுத்து 5 ஆண்டுகளுக்கு முன் முதலாவது கறுப்பின அதிபராக நெல்சன் மண்டேலா பதவியேற்றிருந்தார்.

நைஜீரியாவின் புதிய அதிபர் ஒலுசேகன் ஒபசான்ஜோ லிபிய அதிபர் முஹமர் கடாபி, பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யஸீர் அரபாத் மற்றும் ஆபிரிக்க நாடுகளின் பல தலைவர்களும் பதவியேற்பு வைபவத்தில் கலந்து கொண்டனர். [ஐ]

# கொசோவோவில் மனித புதைகுழிகள் கண்டுபிடிப்பு

பிறிஸ்டினா, ஜூன் 18

கொசோவோ சென்றுள்ள நேட்டோப் படைகள் ஐந்து இடங்களில் மனிதப் புதைகுழிகளைக் கண்டுபிடித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இவற்றில் இருந்து சுமார் 85 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இப்புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டமை பற்றிக் கருத்துத் தெரிவித்த பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் ரொபர்ட்சன் இவ்வாறான புதைகுழிகள் கண்டு பிடிக்கப்படுவது கொசோவோவில் நிகழ்ந்த பயங்கரத்தை எடுத்துக் காட்டுகின்றது.

இதன் மூலம் மேலும் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இப்புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டது தொடர்பான தகவல்கள் ஐ. நாவின் குற்றவியல் விசாரணை மன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

தென்கிழக்கு கொசோவோவில் இருந்தும் தலைநகர் பிறிஸ்டினாவில் இருந்தும் யூகோ இராணுவமும் சேர்பியப் பொலீஸாரும் வெளியேறியுள்ளனர்.

கொசோவோவின் மத்திய பகுதியில் இருந்து இன்று வெள்ளிக்கிழமையும் வடக்குப் பகுதியில் இருந்து எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமைக்கு முன்பாகவும் சகல சேர்பியப் படைகளும் வெளியேற வேண்டும் என நேட்டோ காலக்கெடு விதித்துள்ளது.

சேர்பியப் படைகள் வெளியேறிய இடங்களில் நேட்டோ தலைமையிலான சமாதானப் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

தற்பொழுது கொசோவோவில் உள்ள தமது இல்லங்களுக்கு செல்வதற்கென ஆயிரக்கணக்கான அல்பேனிய இன அகதிகள் டிராக்டர்களிலும் ஏனைய வாகனங்களிலும் கால் நடையாகவும் சென்று கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கொசோவோவுக்குள் பிரவேசிப்பதற்கு என அல்பேனிய — கொசோவோ எல்லைப் பகுதியில் 10 கிலோ மீற்றர் தூரம் வரை அல்பேனிய மக்களும் மற்றும் வாகனங்களும் வரிசையாக காத்து நிற்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. [ஐ-க]

## உலக அரங்கில்

### கிளின்ரன் விஜயம்

வாஷிங்ரன், ஜூன் 18

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் ஒரு வார கால உத்தியோக பூர்வ பயணமாக ஐரோப்பிய நாடுகளுக்கு சென்றுள்ளார்.

இந்தப் பயணத்தின் போது கிளின்ரன் பிரான்ஸ், ஜேர்மன், செக்கோஸ்லேவாக்கியா மற்றும் ஏனைய ஐரோப்பிய தொழில் வள நாடுகளின் தலைவர்களைச் சந்திக்கவுள்ளார்.

இவரது பயணத்தின் போது பால்கன் பகுதியின் எதிர்காலம் குறித்து அதிக கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ-க)

# மேற்கு ஆப்கானில் பெரும் காட்டுத் தீ!

காபூல், ஜூன் 18

ஆப்கானிஸ்தானின் கிழக்கு மாகாணமான பூனாவில் உள்ள மிகப் பெரிய காட்டில் காட்டுத் தீ பரவியுள்ளது.

ஆப்கானிஸ்தானின் பல பகுதிகளுக்கு இக் காட்டில் இருந்தே மரங்கள் எடுத்துச் செல்லப்படுவது குறிப்பிடத்தக்கது.

காட்டுத் தீயை அணைப்பதற்கு கருவிகளோ, உபாயங்களோ தம் வசம் இல்லை என தலிபான் அமைப்பு கவலை தெரிவித்துள்ளதுடன் உலக நாடுகளின் உதவியை அது கோரியுள்ளது.

உள்ளூர் மக்கள் இத் தீயை அணைப்பதற்கு பெரிதும் முயற்சி செய்துவருகின்றனர்.

தீ ஏற்பட்டதற்கான காரணம் எதுவும் இது வரை தெரியவரவில்லை. தீ மேலும் பரவி பாரிய சேதத்தை ஏற்படுத்தலாம் என அஞ்சப்படுகின்றது.

ஆப்கானிஸ்தானின் எல்லை கடந்து பாகிஸ்தானுக்கு மரங்களை விற்கும் பொது மக்களை அவ்வாறு செய்ய விடாது தலிபான் தடுத்திருந்தது. இதற்குப் பழி வாங்கும் ஒரு செயலாக இக் காட்டுக்கு இவர்கள் தீ வைத்திருக்கலாம் என நம்பப்படுகிறது. (ஐ-ச)

# மெக்சிக்கோவில் கடும் பூமி அதிர்ச்சி

மெக்சிக்கோ, ஜூன் 18

மெக்சிக்கோவில் இடம் பெற்ற கடும் பூமி அதிர்ச்சியில் 15 பேர் வரை உயிரிழந்துள்ளனர். 200 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

மெக்சிக்கோவின் கிழக்குப் புறநகரான புப்லாவில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்தத் துயரச் சம்பவம் இடம் பெற்றது.

பூமியதிர்ச்சியால் ஏற்பட்ட மண் சரிவில் நூற்றுக்கணக்கானோர் சிக்குண்டு போயிருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் உயிரிழந்தோரில் அனேகம் பேர் கட்டடங்களின் சிதைவுகளில் நசுங்குண்டே கொல்லப்பட்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பூமி அதிர்ச்சி இரு நிமிடங்களே நீடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-க)

# நிலக்கரி ஊழல் வழக்கிலிருந்து ஜெயலலிதா விடுவிப்பு!

சென்னை, ஜூன் 18

பல கோடி ரூபா நிலக்கரி ஊழல் வழக்கில் இருந்து முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவும் முன்னாள் நிதி அமைச்சர் இரா. நெடுஞ்செழியனும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கை விசாரித்து வரும் நீதிவான் வி. இராதாகிருஷ்ணன் நேற்று முன்தினம் இவ்வாறு தீர்ப்பு வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு மின்துறைக்கு வெளிநாடுகளில் இருந்து நிலக்கரி வழங்கியதில் நடந்ததாகக் கூறப்படும் முறைகேடுகளின் மூலம் இந்திய அரசுக்கு சுமார் 6 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டது தொடர்பாக தமிழக அரசின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா உட்பட 11 பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது தெரிந்ததே.

இந்த வழக்கில் இருந்து தங்களை விடுவிக்குமாறு கோரி ஜெயலலிதா, நெடுஞ்செழியன் உட்பட 10 பேர் தாக்கல் செய்திருந்த மனுக்களை விசாரித்த நீதிபதி ஜெயலலிதாவையும் நெடுஞ்செழியனையும்விடுவித்து தீர்ப்பளித்தார்.

ஏனைய 9பேர் மீதான குற்றச் சாட்டுக்கள்பதிவு செய்யப்பட்டன.

இதேவேளை ஜெயலலிதா விடுவிக்கப்பட்டமை குறித்து ஆட்சேபனை தெரிவித்து தமிழக அரசு மேல் முறையீடு செய்யப் போவதாக கூறியுள்ளது. (க)


நிப்போன் தயாரிப்புகள்
உங்களுடைய பணத்தினை பெறுமதியாக்குங்கள்
குறைந்த விலைகளில், கூடிய வகைகளில்
நிப்போன்
மின் சக்தியை சேமிக்கும் பல்புகள்
COMPACT SIZE

EL 2U — NIPPON EL - 2u MODEL
5 W = 25 W
7 W = 35 W
9 W = 40 W
11 W = 60 W
13 W = 75 W
15 W = 80 W

EL 3U — NIPPON EL - 3u MODEL
15 W = 80 W
18 W = 85 W
20 W = 100 W
24 W = 120 W

ESL F TYPE / ESL GLOBE — NIPPON ESL MODEL
9 W = 40 W
11 W = 60 W
13 W = 60 W
18 W = 85 W

மின்சக்தியின் அடிப்படையில் பணத்தினை சேமியுங்கள் அத்துடன் விலையின் அடிப்படையில் அது சிறந்தது

12 மாதங்கள் உத்தரவாதமுடையது
12 மாதங்களுக்கிடையில் பல்புகளை இலவசமாக பழுதுபார்க்கப்படும்

NIPPON ENERGY SAVING BULBS ARE NOW REPAIRABLE

24 Hours a day will cost you only =/86 cts, SAVE 80%

SPECIAL DISCOUNTS FOR PURCHASES OF 50 BULBS OR MORE

LANKA NIPPON
18, Keyzer Street, Colombo 11.
Tel: 320961, 335301, 437735, 324726
10, Trelawny Place, (Behind Milk Bar)
Bambalapitiya Junction, Colombo 4. Tel : 589992

AVAILABLE ISLANDWIDE

Insist on "NIPPON" Guarantee Card

"NIPPON" The Guaranteed Product

கலர் பல்புகளும் உண்டு

NIPPON ENERGY SAVER

[C/7909]



## அஞ்சல் அலுவலக பதிலாள் தேவை

யாழ். பஸ் நிலையப் பகுதியில் இயங்கும் முகவர் தபால் நிலையம் ஒன்றிற்கு பெண் அஞ்சல் அலுவலக பதிலாள் ஒருவர் தேவை.

விண்ணப்பதாரி ஜி. சீ. ஈ. (சாதாரண) தரத்தில் கணிதம், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியுடன் ஏனைய பாடங்களில் சித்தியடைந்தவராகவும், யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவராகவும், தொலைபேசியை இயக்கத் தெரிந்தவராகவும், 18 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவராகவும் இருக்கவேண்டும். தபால் நிலையங்களில் கடமையாற்றிய முன் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னதாக கீழ் வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

முகவர் தபால் நிலையம்,
12 B, பஸ் நிலையம் எதிரே,
யாழ்ப்பாணம்.

(சி/7930)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

விநாயகமூர்த்தி சிவம் ஐயர், விநாயகமூர்த்தி தீட்சாயினி அம்மா ஆகிய இருவரினது விசேட அடையாள அட்டைகள் [091033144] உரும்பிராய்க்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மட்டுவில் வடக்கு மருதடி பிள்ளையார் கோயிலடி, சாவகச்சேரி என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

[66691]

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலியைச் சேர்ந்த இராஜதுரை இராஜரூபன் என்பவரது விசேட அ. அட்டை [இல. 0903003684] கோப்பாய் சந்திக்கும் கோப்பாய் பிரதேச செயலகத்துக்கும் இடையில் 14-06-99 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்துதவவும்.

[66672]

செ. யோ. கொட்வின் ஆகிய எனது புத்தம் புதிய MD. 90 மோட்டார் சைக்கிளுக்குரிய ஆவணங்கள் 16-06-99 அன்று யாழ். ராசாவின் தோட்ட வீதிக்கும், வேம்படி வீதி ஊடாக சின்னக்கடைக்குச் செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் செல்வா காட்வெயார், இல. 217, ஸ்ரான்லி வீதி, யாழ் / IIS மணிக்கூட்டு வீதி, யாழ். என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். ENo – 2004081 CH.No – 2004146.

(66687)

டாக்டர் க. ராஜலிங்கம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை [273360182V] 12-6-99 யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை சென்ற பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஆதாரவைத்திய சாலை பருத்தித்துறையில் அல்லது 89, பிறவுண்றோட், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (66684)

## திருமண சேவை

எம்மிடம் சகல மதத்திலும் உள்நாட்டு வெளிநாட்டு மணமகன், மணமகள் உள்ளனர். படம், சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: துர்க்கா திருமண சேவை 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(66693)

## SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் பேசப்பயில மேற்படிப்பு மாணவர்க்கும், வேலை பார்ப்பவர்க்குமான விசேட வகுப்புகள் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426, (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், பிளாக் [நாகலிங்க சுவாமிகள்] வீதி, சங்கானை. (66663)

## தங்குமிட வசதி

சகல வசதிகளும் கொண்ட வீட்டில் ஒரு பகுதியில் கல்வி பயிலும் மாணவிகள் இருவர் அல்லது கௌரவமான சிவ குடும்பத்தினர் தங்குவதற்கு வசதியுண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும், ஏனைய விடயங்களில் சலுகை செய்யப்படும். தொடர்பு: 16/5 சீனியர் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, கலட்டி அம்மன் கோயிலடி.

(66683)

## திருத்துதல்

சகல கமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஸ், மூக்குக்கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத்துறை துணைச் சாதனங்களும் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: சு. நாராயணசாமி, இல. 301, கஸ்தூரியார் வீதி, மேல்மாடி, (கன்னாதிட்டிச் சந்தி அருகில்) யாழ்ப்பாணம்.

(66595)

# ச.ச நிலையத்துக்கு புதியகட்டடம்

சுன்னாகம், ஜூன் 18

சுன்னாகம் தெற்கு காந்திரூபன் சனசமூக நிலையத்திற்கு புதிதாக கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் கட்டப்பட்டுள்ள இக்கட்டடத்தில் பாலர் பாடசாலையும், மாலை நேர வகுப்புக்களும் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ–27)


# தேவை

லேலண்ட் டீசல் மெக்கானிக், லொறி பொடி அடிப்பவர்கள், ரிங்கர் வேலை தெரிந்தவர்கள் உடன் தேவை.

**சிவலிங்கம் மோட்டோஸ்**

77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 3212 (66694)

# ★ மோகன்ஸ் ★ தொலைபேசி நிலையம் & ரைப்பிங் சென்ரர்

பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.

குறைந்த கட்டணம்

1) கொழும்புக்கு எடுக்க 1 நிமி. கோல் ரூபா – 6
2) கொழும்பில் இருந்து வரும் 1 நிமி. கோல் ரூபா – 4
3) இந்தியாவுக்கு 1 நிமி. கோல் ரூபா – 60
4) ஏனையநாடுகளுக்கு 1 நிமி. கோல் ரூபா – 100
5) வெளிநாட்டில் இருந்து வரும் கோல் ரூபா – 4

தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்பு, ரைப்பிங் செய்து கொடுக்கப்படும்.

மக்கள் தேவையைப் பூர்த்தி செய்வதே எமது சேவை

உங்கள் ஆதரவே எங்கள் வளர்ச்சி

எஸ். கணேசன்
உரிமையாளர்.

(சி/7927)

# தீபன்ஸ் தொலைத் தொடர்பு சேவை

உள்நாட்டு வெளிநாட்டு அழைப்புகள் உடனுக்குடன் வழங்கப்படும்.

உள்வரும் அழைப்புகளுக்கு எங்குமில்லாதவாறு குறைந்த கட்டணம்

(24 மணி நேரசேவை – இரவுநேர தங்குமிட வசதி இலவசம்)

41 1, நொத்தாரிஸ் லேன், அரியாலை.

T. P. No. 3211

(சி/7931)


# அறிவித்தல்

வலி. தெற்கு

## கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம்

சுன்னாகம்

## பொதுக்கூட்டம்

காலம்: 19-06-99 சனிக்கிழமை காலை 10.00 மணி

இடம்: சுன்னாகம் ப.ல.நோ.கூ. சங்க தலைமைக் காரியாலயம்

தலைவர்: திரு. சி. குமரவேல் (தலைவர், வலி. தெற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்)

சகல அங்கத்தவர்களுக்கும் பொதுக்கூட்ட அறிவித்தல் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தயவு செய்து தவறாது கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இ. பரமேஸ்வரலிங்கம்
செயலாளர்

(66700)

# நிர்மாணத்துறைத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

# கேள்வி அறிவித்தல்

01. பின்வரும் வேலைக்குரிய கேள்விகள் யாழ்ப்பாணம் நிர்மாணத்துறைத் திணைக்களப் பிரதம எந்திரி அலுவலகக் கேள்விச் சபையினரால் 1999 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7ஆம் திகதி முற்பகல் 10.00மணிவரை பிரதம எந்திரி அலுவலகம், நிர்மாணத்துறைத் திணைக்களம், யாழ்ப்பாணத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பெறப்பட்ட கேள்விகள் உடனடியாக இக் காரியாலயத்தில் திறக்கப்படும்.
02. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) கட்டடம் நிர்மாணிப்பதற்கு எம்–9 தரத்திலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.
03. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் (இக்ராட்) வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்களடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. கேள்விப் பத்திரங்களை யாழ்ப்பாணம், நிர்மாணத்துறைத் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் 1999 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2 ஆம் திகதி பிற்பகல் 4.45 மணிவரை கீழ்க் காட்டியவாறு கேள்வி வைப்புப் பணத்தைக் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| மீள நிர்மாணித்தல் — காரியாலயக் கட்டடமும், ஒருபகுதி தொழிலாளர் இரட்டை விடுதியும், — கோழிக்குஞ்சு பொரிப்பு நிலையம் — அச்சுவேலி. | 12,000/- | 250/- |

05. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.
06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். அத்துடன் மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம், நிர்மாணத்துறைத் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடமிருந்து வேலை நாள்களில் பிற்பகல் 4.45 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

எந்திரி. ந. சுந்தரமூர்த்தி,
பிரதம எந்திரி,
நிர்மாணத்துறைத் திணைக்களம்.

கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/7928)

# 30 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி

## பொன்னம்மா விசுவலிங்கம்

(ஆசிரியை. யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை)

பிறப்பு 1940–08–18

இறப்பு 1999–05–20

கல்விச்சேவையினைக் கண்ணியமாய்
ஆற்றி வந்த மணிவிளக்கே!
உடனிருந்த ஆசிரியர்களோடு
சிறார்கள் பலரும் தவித்திருக்க
காலன் உன்னைக் கவர்ந்ததேனம்மா?
திங்களொன்றல்ல நூறு சென்றாலும்
உம் நினைவு எம்மை விட்டு அகலாது!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/சாவகச்சேரி, இந்து ஆரம்ப பாடசாலை. (66698)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கண, இலக்கியங்களில் மாணவர்களை ஊக்குவிக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 18

உயர்தரத் தமிழ் இலக்கண, இலக்கியங்களை மாணவர்கள் கற்பதனை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளில் வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கம் ஈடுபட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பான உரையாடல் நிகழ்வு ஒன்று அண்மையில் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் நடைபெற்றது.

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்க உறுப்பினர்கள், தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய பரிபாலன சபைத் தலைவர் கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியுடனான இந்த உரையாடல் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மரபு வழித்தமிழ் பேணப்படவேண்டும் மற்றும் மாணவர்கள் உயர்தரத் தமிழ்க் கல்வியைப் பயிலுவதற்கு யாழ். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடத்தி வரும் பிரவேச பண்டித, பால பண்டித, பண்டித பரீட்சைகளுக்கான வகுப்புகள் யாழ். குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் நடத்தப்படல் வேண்டும் எனவும் —

குறிப்பாக வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பண்டித வகுப்புகள் மேலும் பல பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்படல் வேண்டும் எனவும்—

மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகின்றார்களில்லை என்பதற்காகப் பரீட்சைகளின் தரத்தினைக் குறைக்கக்கூடாது என ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினைக் கேட்டுக் கொள்வது எனவும்—

அந்த உரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை—

தமிழ் பயிலும் மாணவர்களின் உபயோகத்துக்காக வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கப் பணிமனையுடன் இணைத்து நூலகம் ஒன்று அமைக்கப்படல்வேண்டும். மற்றும் அந்த நூலகத்தில் கிடைத்தற்கு அரிய நூல்கள் பேணிப் பாதுகாக்கப்படல் வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

உரையாடலின் இறுதியில் பண்டிதர், புலவர், வித்துவான்கள் மற்றைய தமிழறிஞர்கள் 'மெல்லத் தமிழினிச் சாகும்...' என்ற பேச்சினை இனி வரும் காலத்தில் பயன்படுத்தாமல் செய்யச் செயற்படுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

(ஐ-7)

## இடத்துக்கிடம் வேறுபடும் தொலைபேசிக் கட்டணம்

அளவெட்டி, ஜூன் 18

யாழ். குடாப்பகுதிகளில் இயங்கிவரும், தனியார் தொலைத் தொடர்பு, நிலையங்களில் இடத்துக்கு இடம், கடைக்கு கடை, வேறுபட்ட கட்டணங்கள் அறவிடப் பட்டு வருவாதகத் தெரியவருகின்றது.

வெளிநாட்டுத் தொடர்புக் கட்டணம் ஒரு நிமிட அழைப்புக்கு மட்டும் 100 ரூபாமுதல் நூற்றி இருபத்தைந்து ரூபா வரை அறவிடப்பட்டு வருகின்றது.

இதே வேளை, உள்ளூர் வெளியூர்களில் இருந்து வரும் அழைப்புகளுக்கு மூன்று ரூபாமுதல் ஐந்து ரூபாவரையும் கட்டணம் பெறம்படுகின்றது.

இங்கிருந்து எடுக்கப்படும் இலங்கைக்கு உட்பட்ட உள்ளூர் தொடர்பு சேவைக்கு, நிமிட மொன்றுக்கு ஐந்து ரூபா முதல் எட்டு ரூபாவரை கட்டணங்கள் அறவிடப்படுகின்றன!

இதேவேளை —

யாழ். குடாநாட்டுப் பகுதிகளுக்கு புதிய தொலைபேசி இணைப்புகள் துரித கதியில் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-13)

## சுயமுயற்சி கடன் உதவி

சண்டிலிப்பாய், ஜூன் 19

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டப் பிரிவின் நிதி உதவி திட்டத்தின் கீழ் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பிரதேசத்தில் சுயமுயற்சி கடன் கோரி விண்ணப்பித்தவர்களில் இரண்டாம் கட்டமாக 17 பேருக்கு சுயமுயற்சிக்கடன் வழங்கப்பட்டு வருகின்றது.

விவசாயம், சிறுகைத் தொழில், கால்நடை வளர்ப்பு ஆகிய தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்காக இப்பிரிவில் மீளக்குடியமர்ந்தவர்களில் பலர் சுயமுயற்சிக் கடன் கோரி விண்ணப்பித்திருந்தனர். இவர்களில் ஒரு பகுதியினருக்கு ஏற்கனவே சங்கத்தினரால் சுயமுயற்சிக்கடன் வழங்கப்பட்டது. தற்போது மேலும் 17 பேருக்கு வழங்கப்பட்டு வருவதாக சங்கத் தலைவர் சி. குமாரவேல் தெரிவித்தார். (ஐ – 135)

## பாம்பு தீண்டியது

தென்மராட்சி, ஜூன் 18

மாட்டுவண்டில் சவாரி பார்த்துவிட்டு வீட்டுக்குச் சென்றவர் பாம்பினால் கடியுண்டார். இச் சம்பவம் கடந்த ஞாயிறன்று மந்துவிலில் இடம்பெற்றது.

இந்த இடத்தைச் சேர்ந்த கே. செல்வரத்தினம் (வயது30) என்பவரே பாம்புக் கடிக்கு இலக்காகி சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார் (ஐ–117)

## ஆசிரியர் பயிலமர்வு

யாழ்ப்பாண, ஜூன் 19

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த மனைப் பொருளியல் ஆசிரியர்களுக்கான பயிலமர்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9-00 மணி முதல் 4–30 மணி வரை யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [க]

## பளையில் அதிபர்கள் நியமனம்

தென்மராட்சி, ஜூன் 18

பளை கல்விக் கோட்டத்தில் வெற்றிடமாக உள்ள பாடசாலை அதிபர் பதவிகளுக்கு புதிய அதிபர்கள் தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் மு. வ. செல்வராசாவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இயக்கச்சி அ. த. க. பாடசாலைக்கு திருமதி இராசம்மா இராசரத்தினமும் கோவில்வயல் அ. த.க. பாடசாலைக்கு கனகசபை பொன்னுத்துரையும், முகாவில் அ.த.க. பாடசாலைக்கு வ. ஜீவரத்தினமும் அதிபர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

முகாவில் அ. த. க. பாடசாலை அதிபர் ந. தாமோதரம் பிள்ளை ஒய்வுபெற்றுச் சென்றதாலும், இயக்கச்சி அ. த. க. பாடசாலை அதிபர் து. முத்தையா கிளாலி றோ. த. க. பாடசாலைக்கும் கோவில் வயல் அ. த. க. பாடசாலை அதிபர் யாழ். பாடசாலைக்கும் இடமாற்றம் பெற்றுச் சென்றமையடுத்தும் வெற்றிடங்கள் ஏற்பட்டதால் புதிய நியமனங்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ–117)

### விசேட அ. அட்டை பெற

## விண்ணப்பித்தோருக்கு சான்றிதழ் வழங்குக

### கிராம அலுவலர்கள் கோரிக்கை

வலி வடக்கு, ஜூன் 18

விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு, விண்ணப்பித்தமைக்கு அத்தாட்சியாக பற்றுச் சீட்டு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவு கிராம அலுவலகர்கள், பிரதேச செயலாளரிடம் இக்கோரிக்கையை முன் வைத்துள்ளார்.

தற்போது விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு அத்தாட்சியாக எந்தவகையான ஆவணங்களும் வழங்கப்படுவதில்லை.

சோதனை நிலையங்களில் விசேட அடையாள அட்டை இல்லாததால் அவர்கள் பல்வேறு சிரமங்களையும் அனுபவித்து வருகின்றனர்.

சோதனை நிலையங்களில் இத்தகைய பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கு வசதியாக பற்றுச்சீட்டு வழங்க நடவடிக்கை எடுக்கும்படி கிராம அலுவலர்கள் கோரியுள்ளனர். (ஐ–86)

## 'யுனிசெவ்' உதவியுடன் கிணறுகள் அமைக்கப்படும்

வலி. வடக்கு, ஜூன் 18

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் யுனிசெவ் உதவித் திட்டத்தின் கீழ் குடிதண்ணீர் பெறுவதற்கு வசதியாக கிணறுகள் புதிதாக அமைக்கப்படுவதுடன் தூர்ந்துபோன கிணறுகளுமதுப்புரவு செய்யப்படவுள்ளன.

இத்திட்டங்களுக்கென சுமார் ஒன்றரை லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கல்வியங்காடு, கொக்குவில் மேற்கு பகுதிகளில் 2 புதிய கிணறுகள் அமைக்கப்படுவதுடன் மற்றும் பழுதடைந்த 20 கிணறுகள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாகத் திருத்தஞ் செய்யப்படவுள்ளன.

புதிய கிணறுகளுக்குத் தலா 20 ஆயிரம் ரூபாவும், கிணறுகள் திருத்துவதற்கு 5 ஆயிரத்து நானூறு ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

(ஐ-86)

## போட்டிப் பரீட்சை

நவாலி, ஜூன் 19

இணைந்த சேவை மொழி பெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு ஒன்றிற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சைக்கு பரீட்சைஆணையாளரினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் யாவும் இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளருக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இது பற்றிய முழு விவரங்களும் 28.05.99 ஆம் திகதிய வர்த்தமானியில பிரசுர மாகியுள்ளது. (ஐ–100)

★ ★ ★

நவாலி, ஜூன் 19

அரச திணைக்களங்களில் சிறாப்பர், பண்டசாலைக் காப்பாளர், கணக்குப் பதியுநர் ஆகிய சேவைகளில் பணி புரிபவர்களை அதிசிறப்புத் தரத்திற்கு நியமனம் செய்வதற்கான மட்டுப்படுத்தப் பட்ட போட்டிப் பரீட்சைக்கு பரீட்சை ஆணையாளரினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி இம் மாதம் 26 ஆம் திகதியாகும். இது சம்பந்தமான முழு விவரங்களும் 28.5.99 இல் வெளி வந்த வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளன. (ஐ-100)

## பரந்தன் ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியர்களது சம்பளம் இன்று 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் எதிர் வரும் 22 ஆம் திகதி வரை வழமையான இடத்தில் வழங்கப்படும் என மேற்படி கூட்டுத்தாபன தொழில் முகாமையாளர் க. சிவபாதசுந்தரம் அறிவித்துள்ளார்.

(க)


உ

சாவகச்சேரி

அருள்மிகு இலஞ்சியாரணியம் மண்டுவில் அம்மன் ஆலய

(சோலை அம்மன்)

பிரமாதி ஹூமஹோற்சவ விழா

கொடியேற்றம் : 19-06-99 சனி காலை 10.00 மணி
தேர் : 27-06-99 ஞாயிறு காலை 9.30 மணி
தீர்த்தோற்சவம் : 28-06-99 திங்கள் காலை 7.00 மணி

சிவஸ்ரீ க. கிருபானந்தக் குருக்கள்
பிரதமகுரு
'இலஞ்சியாரணியம்' மட்டுவில் அம்மன் கோயில்,
சாவகச்சேரி. [66644]

மலிவு விற்பனை

வாருங்கள்! வந்து வாங்குங்கள்!

STOCK CLEARENCE SALE

ஆடவர், மகளிர், குழந்தைகளுக்கான ஆடை வகைகளும்
விசேடமாக இறக்குமதி செய்யப்பட்ட
Ⓥ சேட் Ⓥ ரீ சேட்
மற்றும்
Ⓥ றெடிமேட் வகைகள் Ⓥ சூட்டிங் வகைகள்
Ⓥ துணி வகைகள்
என்பனவற்றை மலிவு விலையில் பெற்றுக் கொள்ள

மோகனம்

இல, 41, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(66685)

உ

குரும்பசிட்டி சன்மார்க்க சபை

கலாபூஷணம் ஏ. ரி. பொன்னுத்துரை

அவர்களின்

பாராட்டு விழாவும் தனிநடிப்புப் போட்டி பரிசளிப்பு விழாவும்

இடம்: இராமநாதன் கல்லூரி மண்டபம், மருதனார்மடம்.

காலம்: 20-06-1999 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி

தலைவர்: கலாநிதி எஸ். சிவலிங்கராஜா
(தமிழ்த்துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்)

பிரதம விருந்தினர்கள்:

திருமதி கோகிலா மகேந்திரன்
(உதவிக் கல்விப் பணிப்பாளர்)

திரு. பொன். பூலோகசிங்கம்
(சட்டத்தரணி)

திரு. சி. விக்னராஜா
(முகாமையாளர் இலங்கை வங்கி, சுன்னாகம்)

திரு. ந. சீவரத்தினம்
(முகாமையாளர் இலங்கை வங்கி, காங்கேசன்துறை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பொ. பாலகுமார்
பொதுச் செயலர்

குரும்பசிட்டி, (66662)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கரவெட்டி

## கரவெட்டி தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகராலயம்

### மஹோற்சவ கால நிகழ்வுகள்

- ✠ 19-6-99 சனிக்கிழமை — மு. ப. 8.30 - கொடியேற்றம்
- ✠ 27-6-99 ஞாயிற்றுக்கிழமை — மு. ப. 8.30 - தேர்
- ✠ 28-6-99 திங்கட்கிழமை — மு. ப. 9.00-தீர்த்தோற்சவம்

மஹோற்சவ காலங்களில் பி. ப. 4. 45 தொடக்கம் பி. ப. 6.00 மணி வரை தெய்வீகப் பேருரைகள் நடைபெறும்.

ஆலய பரிபாலனசபை,
தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகராலயம்.
கரவெட்டி.

(சி/7913)

## பண்டிதமணி நூற்றாண்டுவிழா போட்டிகள்

வலிகாமம் தெற்கு, ஜூன்18
இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி பண்டிதமணி நூல் வெளியீட்டு சபையினர் பாடசாலை மாணவர்களிடையே நடத்தும் பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப் போட்டி என்பன நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை வண்ணார் பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.

பேச்சுப் போட்டியின் இறுதித் தெரிவு பிற்பகல் இரண்டு மணிக்கு இடம்பெறும்.

பேச்சுப் போட்டியில் 53 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்ற உள்ளனர்.

கட்டுரைப் போட்டியில் 32 பாடசாலை மாணவர்களும், மரபுக்கவிதைப் போட்டியில் 25 போட்டியாளர்களும் பங்குபற்ற உள்ளனர் என பண்டிதமணி நூல்வெளியீட்டுச்சபைச் செயலாளர் அ. பஞ்சாட்சரம் தெரிவித்துள்ளார்.


(ஐ-152)

## சாரணர் கலைக்கூறு பயிற்சி

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தினரால் சாரணர் தலைவர் கலைக்கூறு II பயிற்சிகள் இம்மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் 28ஆம்திகதி வரை நான்கு நாள்களுக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நடத்தப்பட உள்ளது.

மேற்படி பயிற்சியில் கலைக்கூறு I முடித்த சகல சாரணர் தலைவர்களும் கலந்து கொள்ளலாம் என உதவி மாவட்ட ஆணையாளர் க. தாமேசன் அறிவித்துள்ளார்.

## நெஞ்சை விட்டகலாத 7ஆம் ஆண்டு நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14 | 18 |
| 12 | 06 |
| 1958 | 1992 |

செல்வி
### சௌபாக்கியவதி நவரத்தினராசா
(ஆசிரியை யா/வட. இந்து மகளிர் கல்லூரி)

எனது அருமை மகளே!
நீங்கள் பிரிந்து ஏழு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவலைகள் எமது நெஞ்சை விட்டகலாது;

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
ஆருயிர் அம்மா,
அண்ணாமார், அண்ணிமார்,
மருமக்கள்.

கணேசன் தோட்டம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(சி/7899)


## சுவைப்பிரியர்களுக்கு புதியதோர் உதயம்!

கச்சேரி நல்லூர் வீதியில்!!

## CITY EATING HOUSE
## சிற்றி உணவு விடுதி

- சைவ, அசைவ உணவுகள்
- சிற்றுண்டி வகைகள்

திருமண வைபவங்கள் மற்றும் ஏனைய வைபவங்களுக்கு வேண்டிய உணவுத் தேவைகளை ஓடருக்கு பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**சிற்றி உணவு விடுதி**
17/1, றெயில்வே வியூ
கச்சேரி நல்லூர் றோட்,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.


(66677)



## றோயல்
சாவகச்சேரி
A/L 99 கணக்கீடு
துரித மீட்டல்
A/L 2000, 2001
பிரிவுகளும்
Mr. முகுந்தன்
ஆரம்பம்: 18—06—99
2.30 P.M.
--நிர்வாகி

(66692)


## 31 ஆம் நாள் நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 | 19 |
| 08 | 05 |
| 1937 | 1999 |

### அமரர் சின்னக்குட்டி பரராஜசேகரம்
(தமிழ் இசை ஒலியின் மணிமுடி)

| | | | |
|---|---|---|---|
| மல்லிகை | போல் | சிரிக்கின்ற | பரராஜசேகரம் |
| மறைந்த | நாளில் | ஆராதனை | செய்வோம் |
| முல்லைப்பூ | அழகின் | முகமலர்ந்து | ஒளிதந்த |
| நாயன்மார் | மண்ணின் | நாயகனை | வணங்குவோம் |
| ரோஜாப்பூ | சொற்களால் | வாழ்க்கையில் | உயர்ந்த |
| ராஜாப்பூ | பரராஜசேகரத்தை | ஒலிகளால் | அஞ்சலிப்போம் |
| நிலாப்போல் | வாழ்ந்த | நேர்மையின் | உள்ளத்தை |
| நெஞ்சில் | நிறுத்தி | காலம்முழுவதும் | கைகூப்புவோம் |
| மனைவி | பிள்ளைகளை | மகிழ்வுடன் | காத்திட்ட |
| மங்கல | தெய்வத்தை | மலர்களால் | காவுவோம் |
| இளைய | தலைமுறைக்கு | சேகர் சவுண்ட் | தந்த |
| இனிய | மெல்லிசைக்கு | இதயத்தால் | அஞ்சலிப்போம் |
| சுவாசக் | காற்றிலும் | சுதந்திரமாய் | வாழ்ந்த |
| சந்தன | மலருக்கு | சங்கீதம் | கொட்டுவோம் |
| திசைகள் | முழுவதும் | மெல்லிசையை | தூக்கிச்சென்ற |
| தெய்வத்தின் | [illegible] | [illegible] | இறைஞ்சுவோம் |

குடும்பத்தினர்.

சேகர் சவுண்ட் அன்ட் மியூசிக்
No. 6, கடுக்காயடி லேன், நல்லூர், யாழ்ப்பாணம்.

(66669)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## செம்மணி சொல்வது என்ன?

அந்தா, இந்தா என்று ஒரு வருட காலமாகக் கடத்தப்பட்டு வந்த செம்மணி மனித புதை குழிகளைத் தோண்டும் வேலைகள் நேற்று முன்தினம் உரிய முறைப்படி ஆரம்பிக்கப்பட்டன. செம்மணி விவகாரத்தின் பிரதான பாத்திரமாக விளங்கும் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, கொலைப் பயமுறுத்தலின் மத்தியிலும் தனக்குத் தெரிந்த தகவல்களை மிகத் துணிகரமாக வெளியிட்டுள்ளார். சர்வதேச மற்றும் உள்நாட்டுப் பார்வையாளர்கள் முன்னிலையில் தோண்டும் பணிகள் ஆரம்பமாகின.

கோப்ரல் ராஜபக்ஷ வெளியிட்ட தகவல்கள் அரசாங்கத்தின் ஓர் அங்கமான — கருவியான — ஆயுதப் படையினர் தமிழர்களை எவ்வித மனக் கூச்சமும் இன்றி இன அழிப்புச் செய்கிறார்கள் என்பதனை அப்பட்டமாக எடுத்துச் சொல்கின்றன.

அது மட்டுமன்றி, இலங்கை இராணுவம் தங்களுக்கு விரோதமானது என்று தமிழர்கள் சந்தேகிப்பதை, கருதுவதை ராஜபக்ஷவின் தகவல்கள் ஊர்ஜிதம் செய்கின்றன.

சட்டம் ஒரு புறம் இருக்கட்டும்; நாம் செய்தால் கேட்பவர்கள் யார்; தண்டனை தருபவர்கள் யார்; என்ற மனப் போக்குடன் தமிழர்களை எதுவும் செய்யலாம் என்ற எண்ணம் ஆயுதப் படைகள் மத்தியில் வளர்ந்துள்ளது; வளர்க்கப்பட்டுள்ளது என்பதற்கான அத்தாட்சியாகவும் ராஜபக்ஷவின் வாக்கு மூலம் விளங்குகிறது.

தமது பிள்ளைகளையும், கணவன்மாரையும் காணவில்லை என்று கடந்த மூன்று வருடங்களாக ஏங்கிய வண்ணம் நடைப்பிணங்களாக, மனப்பதகளிப்புடன் நாள்களை நகர்த்திக் கொண்டிருக்கும் நூற்றுக் கணக்கான பெற்றோர்களும் மனைவிமார்களும் உறவினர்களும் ராஜபக்ஷ தெரிவித்த தகவல்களைக் கேட்டு "மூர்ச்சை அடைந்துள்ளனர்"!

அப்பாவி மக்களை நிராயுதபாணிகளான மக்களை, எங்களை வருமாறு அழைக்கிறார்கள் எதுவும் செய்யமாட்டார்கள் என்று நம்பி வந்த மக்களை, விடுதலைப் புலிகள் சந்தேக நபர்கள் என்று பட்டங்கட்டி, கைது செய்து சித்திரவதை செய்து, கொலை செய்து புதைகுழிக்குள் போட்டுவிட்டு —

குடாநாட்டு மக்களை விடுவித்துவிட்டோம் என்று அரசாங்கம் கூறுவது எவ்வளவு போலித்தனமானது என்பதனையும் ராஜபக்ஷவின் தகவல்கள் வெளிப்படுத்தி உள்ளன.

போர் நடைபெறும் பிரதேசங்களில்தான், புலிகளுக்கு எதிரான போர் என்று கூறிக் கொண்டு பொதுமக்களும் கொல்லப்படுகிறார்கள் — கொல்லப்பட்டார்கள் என்றால் —

விடுவிக்கப்பட்ட பிரதேசம் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் அல்லது அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறிக் கைது செய்து அப்பாவித் தமிழ்மக்கள் கொல்லப்பட்டனர் — என்ற தகவல் இன அழிப்பை எடுத்துக் காட்டும்ஒன்றே.

யாழ். குடாநாட்டில் இன்னும் சந்தேகத்தின் பேரிலான கைதுகள் தொடர்வதால் அரசு இது விடயத்தில் ஆயுதப் படைகளைக் கட்டுப்படுத்தவேண்டும். அவர்கள் இத்தகைய பாதகங்களை செய்வதற்கு பகிரங்க ஆணைச்சீட்டு வழங்கும் சட்டங்களை வாபஸ் பெறாவிடில், இன ஒழிப்பு தொடரும் என்றே தமிழ்மக்கள் அஞ்சுகிறார்கள்.

# கண்ணனிடம் முழுமையாகச் சரணடைந்தால் பாவங்களை விலக்கி நன்மைகளைப் பெற்றிடலாம்

## ஞானக் கதிர்

அமரர்

### கே. வி. எஸ். வாஸ் M.A

(முன்னாள் பிரதம ஆசிரியர் வீரகேசரி)

இந்து சமயத்திலே துவைதம், அத்வைதம், விசிட்டாத்வைதம் என்று மூன்று வேதமான கோட்பாடுகள் இருக்கின்றன. சர்வேஸ்வரனான பரமாத்மா ஒருவன் தான் என்ற விடயத்தில் இம் மூன்று கோட்பாடுகளுக்கும் இடையில் கருத்து வேறுபாடு இல்லை. ஜீவாத்மாவுக்கும், பரமாத்மாவிற்குமிடையிலுள்ள உறவு முறைகள் பற்றி மட்டுந்தான் கருத்து வேறுபாடு. இந்தக் கருத்து வேறுபாடுகளும் ஒரே வேத சூத்திரங்களுக்கு வெவ்வேறுவிதமான உட்பொருள்களை உருவாக்கிக் கொண்டதினால் எழுந்தவைகளேயன்றி ஆதாரமான வேத சூத்திரங்களில் வேறுபாடுகள் கிடையாது.

அத்வைதிகள் பெரும்பாலும் சைவர்கள், விசிட்டாத்வைதிகள் எல்லோருமே வைஷ்ணவர்கள். வேறுபாடுகளை விளக்குவது வாதப் பிரதிவாதங்களை வளர்க்குமாதலால், அதைத் தவிர்த்து வைஷ்ணவத்தின் மூலக் கோட்பாடுகளை மட்டுமே இங்கு குறிப்பிடுவோம்.

ஸர்வதர்மான் பரித்யஜ்ய
மாமேகம் சரணம் வ்ரஜ
அஹம் த்வா ஸர்வ
பாபேப்யோ
மோக்ஷயிஷ்யாமி மாசுச.

கண்ணன் அருளிய கீதையின் கடைசி அத்தியாயமான பதினெட்டாம் அத்தியாயத்தில்உள்ள இந்தஒரு சுலோகத்தில் ஸ்ரீ வைஸ்ணவத்தின் முழுத் தத்துவமும் அடங்கியுள்ளதென்று கூறலாம். கீதை வேதங்களின் சாரம். அதில் மனுக்குலம் உயர்வதற்கு எத்தனையோ மார்க்கங்களைச் சொல்லுகிறார் கண்ண பரமாத்மா.

அந்த உபதேசங்களின் சாரத்தையெல்லாம் பிழிந்து எடுத்து, கடைசி அத்தியாயத்தில் தென்படும் மேற்படி சுலோகத்தில் தனது முடிவான, இறுதியான கருத்தை வெளியிடுகிறார் பகவான். இந்த முடிவான கருத்தே ஸ்ரீ வைஷ்ணவத்தின் ஆதார கருதியாக, அடிப்படைக் கோட்பாடாக அமைந்துள்ளது.

ஸர்வதர்மான் பரித்ய்ஜ்ய — சகல தர்மங்களையும் துறந்துவிட்டு; மாமேகம் சரணம் வ்ரஜ — என ஒருவனையே சரண் அடைவாயாக; அப்படிச் செய்வாயானால் அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ — உன்னை எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுவித்து; மோக்ஷயிஷ்யாமி மாசுச—மோக்ஷத்தை உனக்கு அளிக்கிறேன் இதில் சந்தேகம் வேண்டாம். அதுதான் இந்த சுலோகத்தின் பொருள்.

என் ஒருவனிடமே பரிபூரணமாகச் சரண் அடைபவர்களைச் சகல பாவங்களிலிருந்தும் விடுவித்து மோட்சத்தை அளிப்பேன் என்று கூறுவதோடு நில்லாமல் "மாசுச இதில் சந்தேகமோ விசனமோ வேண்டாமென்றும் அறுதியிட்டுச் சொல்கிறார் பரமாத்மா." இத்தகைய பரிபூரண, நிபந்தனையற்ற சரணாகதியே ஸ்ரீ வைஷ்ணவத்தின் கருவூலம்.

எல்லாத் தருமங்களையும் விட்டு விட்டு கண்ணன் கூறுவதன் பொருள் ஒவ்வொருவரும் அவர்களது ஸ்வதர்மத்தைக் கைவிட்டு விட வேண்டுமென்பது பொருளல்ல. ஸ்வதர்மத்தைச் செய்யும் பொழுது அதையும் 'நான் செய்கிறேன்' என்ற எண்ணமில்லாமல் "அவன் செய்விக்கிறான்" என்ற திட நம்பிக்கையுடன் பலனைக் கருதாமல் ஈசுவர அர்ப்பணமாக எதையும் செய்ய வேண்டும்.

அதாவது கருமத்தின் பலனைத் தியாகம் செய்து பலன்களை எதிர்பாராமல் எதையும் ஈசுவர அர்ப்பணமாகச் செய் என்கிறார் பரமாத்மா.

கர்மண்யேவாதி காரஸ்தே
மா பலேஷு கதாசந

உனக்கு கருமம் செய்ய மட்டுப் தான் உரிமையுண்டு. அதற்குரிய பலனை எதிர் பார்க்க உரிமையில்லையென்று கண்ணன் கூறும் பொழுது, "உன் கடமை" என்னை வழிபடுவது; என் கடமை அதற்குரிய பலனைக் கொடுப்பது; என் கடமையைச் செய்ய எனக்குத் தெரியும். அதைப்பற்றி நினைக்காமல் உன் கடமையைச் செய்" என்று அவர் அறிவுறுத்துகிறார். ஏன்?.

பாவத்துக்கு எப்படிப் பந்தம் உண்டோ அதே போலப் புண்ணியத்துக்கும் பந்தம் உண்டு பாவிகள் செய்த பாவத்தின் தன்மைக்கேற்ப தண்டனையை அனுபவித்து விட்டுத்திரும்பவும் பிறவியெடுக்கிறார்கள். அதே போல புண்ணிய பலனை எதிர்பார்த்துக் கருமமாற்றியவர்கள், புண்ணியத்தைச் சம்பாதித்து, அதற்குரிய சுகம் அனுபவித்து, புண்ணியம் தீர்ந்ததும் மறு பிறப்பு எடுக்கிறார்கள். ஆக இரு சாராருக்கும். பிறவிக்கடலிலிருந்து முக்தி அல்லது விடுதலைகிடைக்க வழியில்லை அப்படியானால் பிறவிக் கடலைத் தாண்ட என்னதான் வழி!.

இங்குதான் சரணாகதியின் மேன்மை வெளியாகிறது. எதைச்செய்தாலும் அதற்குப் பலனை எதிர் பாராமலும் "நான் செய்கிறேன்" என்ற எண்ணமில்லாமலும் "என்னைக் கொண்டு அவன் செய்து கொள்கிறான்" என்ற எண்ணத்துடனும் பகவத் பிரீதிக்காக ஈஸ்வர அர்ப்பணமாகச் செய்து "உன்னை விட்டால் எனக்கு வேறு கதியில்லை' என்ற திட நம்பிக்கையுடன் செய்ய வேண்டும்.

உண்மையான பக்தன் எப்பொழுதும் இறைவனைச் சார்ந்தவன். அந்தப் பக்தன் யாசிப்பது இறைவனுக்கு என்றென்றும் அடிமை செய்வதேயன்றி அந்த இறைவன் கொடுக்கக்கூடிய சொற்பப் பயன்களையல்ல. இப்படி எதையும் வேண்டாமல் இறைவா, நீயே எனக்கு வேண்டுமென்று அபயம் புகும் பக்தனை.

"அபயம் ஸரிவபூதெப்யோ
ததாம்யேதத் வ்ரதம் மம"

அபயமளித்து என்னுடன் சேர்த்துக் கொள்ளுவதுதான் என் விரதம் என்கிறார் பகவான்.

இதைப் பெரியாழ்வாரும் மிக அழகாகச் சொல்லுகிறார்.

"எந்நாள் எம்பெருமான்
உந்தனுக் கடியொமென்
றெழுத்துப்பட்ட
அந்நாளே அடியோங்கள்
அடிக்குடில்
வீடுபெற்று உயந்தது
காண்."

"சர்வேஸ்வரா! என்றைய தினம் நான் உன்னுடைய அடிமை என்று அடிமைச் சாசனம் என் வாழ்வில் எழுதப்படுகிறதோ அந்நாளே நான் முக்தி பெற்று உய்யும் திருநாள்" என்கிறார் ஆழ்வார்.

தொண்டரடிப் பொடியாழ்வாரோ

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம்
கொழுந்தே என்னும்
இச்சுவைத் தவிர யான்போய்
இந்திரலோகம் ஆளும்
அச்சுவைப் பெறினும்
வேண்டேன்
அரங்கமா நகருளானே.

குலசேகராழ்வாரோ இன்னும் ஒரு அடிமேலே போய்.

"ஆனாத செல்வத்து அரம்பையர்கள் சூழ வான் ஆளும் செல்வமும் மண் அரசும் நான் வேண்டேன்'

"இந்திரலோகம், சந்திரலோகம், பூலோகம் முதலான சகல புவனங்களையும் இந்தா எடுத்துக்கொள் என்று நீ வாரி வழங்கினாலும் அவைகளை நான் ஏற்கமாட்டேன். ஏனெனில் எனக்கு வேண்டுவது உனக்குப் பணிபுரிவது ஒன்று தான். அது ஒன்று தான் எனக்கு வேண்டும்" என்று ஈசனிடம் வேண்டுகிறார் குலசேகரப் பெருமான்.

"பட்டமும் பதவியும் செல்வாக்கும் கொடாமல் தீராத துன்பங்களைக் கொடுத்துக் கொண்டிருந்தால் உன்னை மறந்து விடுவேன், வெறுத்து ஒதுக்கிவிடுவேன் என்று நினைக்கின்றாயா?" என்று இறைவனிடம் ஒரு கேள்வியைப் போடுகிறார் குலசேகரர். அதற்கு அவரே பதிலும் சொல்லி விடுகிறார்.

"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால் மாளாத காதல் நோயாளன் போல்" ஒரு நோயாளிக்கு வைத்தியன் சிகிச்சை செய்கையில் கத்தியால் சத்திர சிகிச்சை செய்கிறான்; தீயிட்டுச் சுடுகிறான். இதற்காக வைத்தியனிடம் நோயாளன் வெறுப்புக் கொள்ளுகிறாரா?இல்லையே! எப்படியும் வைத்தியன் நம்மைக் குணப்படுத்திவிடுவான், என்ற நம்பிக்கையில் அவனிடம் அன்பு செலுத்துகிறான்

அதே போல இறைவா. எனக்கு நீ என்ன துன்பம் கொடுத்தபோதிலும் என்னைப் பக்குவப்படுத்தி ஆட்கொள்ள நீ கையாளும் உபாயமாகவே அதைக் கருதுவேன்" என்கிறார் குலசேகரர்.

இத்தகைய பரிபூரண சரணாகதியே வைஸ்ணவத்தின் அடித்தளமாக அமைந்துள்ளதென்பது கவனிக்கத்தக்கது.

★

(நன்றி:— ஸ்ரீ ஞானானந்த சேவா சமாஜம் சிறப்பு மலர் —1975)

## வீதித்தடையினால் போக்குவரத்துச் சிரமம்

திருநெல்வேலி, ஜூன் 18

திருநெல்வேலி, கொக்குவில் பிரதான வீதியில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு சமீபமாக வீதிக்குக் குறுக்காகப் போடப்பட்டுள்ள வரம்பினால் இவ் வீதி வழியாக வாகனங்களில் செல்பவர்கள் மிகுந்த சிரமமடைந்து வருகின்றனர்.

மிகவும் உயரமாக அமைக்கப்பட்ட இந்த தாரினாலான வரம்பினால் போக்குவரத்திற்கு மக்கள் சிரமப்படுவதாகக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-135)

## நாளை

**ஆனி 5**

சனிக்கிழமை

திதி: ஷஷ்டி

பிற்பகல் 4.18 வரை

நட்சத்திரம் மகம்.

நண்பகல்: 11.52 வரை.

ஷஷ்டி விரதம்

சுபநேரம்: 2.54 — 4.24

ராகுகாலம்: 8.54—10.24

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

இறைவனை வணங்கி வழிபட்டாலன்றிபொய்பொறாமை முதலிய தீய பண்புகளை அகற்ற முடியாது.

— இராமலிங்க அடிகள்

## மூலதன ஒதுக்கீட்டு நிதி முழுமையாகக் கிடைக்கவில்லை

சுன்னாகம், ஜூன் 18

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் பிரமாண அடிப்படையிலான மூலதன ஒதுக்கீட்டின் கீழ் செய்யப்பட்ட திட்டங்கள் சிலவற்றுக்கான கொடுப்பனவுகள் இன்னமும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடத்துக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 10 லட்ச ரூபாவில் 4 லட்ச ரூபா ஒதுக்கீட்டுக்கான கொடுப்பனவுகளே இதுவரை வழங்கப்படவில்லை.

இந்த ஒதுக்கீட்டின் கீழ் மூன்று பாடசாலைகளில் மலசல கூடங்கள் அமைக்கப்பட்டதுடன், வீதி திருத்தம், குழாய்க்கிணறு அமைத்தல் ஆகிய திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

வடக்கு- கிழக்கு மாகாண சபையால் இதற்கான கட்டு நிதி விடுவிக்கப்படாமையாலேயே, இதற்சான கொடுப்பனவு வழங்கப்படாதிருப்பதாக பிரதேச செயலக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

(ஐ-27)

## உடற்பயிற்சி போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 18

கோப்பாய் பிரிவுப் பாடசாலைகளுக்கான 15, 19 வயது ஆண், பெண் பிரிவுகளுக்கான உடற்பயிற்சிப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்குப் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் நடைபெறும்.

(இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழுக்கையாறு மூலம் அராலி கடலுக்குள்

# மழைநீர் விரயமாவதைத் தடுக்க சங்கரத்தையில் குளம் அமைக்குக

## மானிப்பாய் விவசாய சம்மேளனம் கோரிக்கை

சண்டிலிப்பாய் ஜூன் 18

மாரிகாலத்தில் வழுக்கை ஆற்றின் மூலம் அராலிக் கடலுக்கு வீணாக செல்லும் மழை நீரைத்தேக்கி வைத்து விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்கு வசதியாக சங்கரத்தை—நவாலி பாலத்திற்கு சமீபமாகவுள்ள முடிக்குரிய காணியில் புதிய குளமொன்றை அமைக்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனம் சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்கு சமர்ப்பித்துள்ள 1999 ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டங்கள் அடங்கிய மகஜரில் கோரிக்கை விடுத்துள்ளது.

சம்மேளனத்தின் தலைவர் சி. பொ. வ. மா. க. முதலியார், செயலாளர் அ. மயில்வாகனம் ஆகியோரால் கையொப்பமிடப்பட்டு கடந்த வாரம் அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் இம் மகஜரில் மானிப்பாய் மருதடி குளப் பகுதியிலுள்ள தூர்ந்துபோன நிலையிலுள்ள மூன்று கிணறுகளைப் புனரமைப்பு செய்வது, கேலன்காமம் குளம் பகுதியிலுள்ள தூர்ந்துபோன இரு கிணறுகளைப் புனரமைப்புச் செய்வது, கிராய்க் குளத்தை ஆழமாக்கி குளக் கட்டைப் புனரமைப்பதுடன் துரிசுகளை அமைத்து நீர்த் தடுப்புப் பலகைகள் போடுதல், கட்டுடை அரசடிப் பிள்ளையார் விவசாய வீதியை மானிப்பாய் மேற்கு பொன்னாலை பிரதான வீதி வரை நீடிப்புச் செய்து இணைத்தல் ஆகிய திட்டங்கள் உட்பட பத்துத் திட்டங்கள் பிரதேச செயலாளரின் இவ்வருட பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. (ஐ-135)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 18

பன்னாலை சிவபூதராய ஆலய வருடந்த உற்சவத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் பூங்காவனத் திருவிழா சங்காபிஷேகத்துடன் நடைபெறும். அத்துடன் மகேஸ்வர பூஜையும் இடம்பெறும். நாளை காலை வைரவர் பொங்கல் நடைபெறும். (க)

தென்மராட்சி, ஜூன் 18

சாவகச்சேரி வடக்கு மண்டுவில் அம்மன் (சோலை அம்மன்) ஆலய மகோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

எதிர் வரும் 27 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தேர் உற்சவமும் மறுநாள் காலை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (க-117)

★ ★ ★

நெல்லியடி, ஜூன் 18

கரவெட்டி தச்சன்தோப்பு சிந்தாமணிப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 28 ஆம் திகதி இரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

உற்சவ நாள்களில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனின் சமயச் சொற்பொழிவு இடம்பெறும். (க-109–173)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 18

சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் கோயிலின் வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

எதிர்வரும் 27 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (க)

★ ★ ★

அளவெட்டி, ஜூன் 18

அளவெட்டி தெற்கு பெருமாக்கடவைப் பிள்ளையார் கோயில் வருடாந்த மகோற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 27 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெற உள்ளன. (க-13)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 18

கொடிகாமம் கட்டை பறித்தான் திருநீலகண்ட விநாயகர் ஆலய வருடாந்த அபிஷேகமும் ஆயிரத்தெட்டுச் சங்காபிஷேகமும் எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். அத்துடன் விநாயகரின் வீதியுலாவும் இடம்பெறும். (க)

★ ★ ★

யாழ்ப்பாணம். ஜூன் 18

நல்லூர் சட்டநாதர் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன சம்புரோட்சண பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-10 மணிக்கு நடைபெறவுள்ளது. (க)

★ ★ ★

சுழிபுரம், ஜூன் 18

பனிப்புலம் காலையடி ஸ்ரீ ஞான வேலாயுத முருகன் ஆலயத்துக்கு அருகில் அமைக்கப்பட்ட கௌரி அம்பிகா சமேத கேதீஸ்வரநாதர் ஆலய நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-16 மணி முதல் 10-19 மணிவரை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக ஆரம்பக் கிரியைகள் யாவும் 23 ஆம் திகதி காலை 6 மணிக்கு ஆரம்பமாகும். 24 ஆம் திகதி காலை முதல் அடியார்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

அன்றைய தினம் சைவசித்தாந்த பண்டிதர் செ. சிவபாதம் எழுதிய ‘சிவஞான போதம்’ சிறப்புக் கட்டுரை நூல் வெளியீடும் நடைபெறவுள்ளது. (க-28)

## தீவக லயன்ஸ் பதவியேற்பு வைபவம்

தீவக லயன்ஸ் கழகத்தின் புதிய ஆண்டுக்கான வருடாந்த பதவியேற்பு வைபவமும் புதிய உறுப்பினர்களின் பதவிப் பிரமாணமும் ஸ்தாபக அங்கீகரிப்பு நிகழ்வும் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக பிராந்தியத் தலைவர் வைத்தியகலாநிதி லயன் எஸ். அருளானந்தமும் சிறப்பு விருந்தினர்களாக லயன் எஸ். பத்மநாதன், வைத்தியகலாநிதி லயன் வீ. தியாகராசாவும் கலந்துகொள்வார்கள்.

இந் நிகழ்வில் தீவகத் தலைவர் லயன் எஸ். விக்னேஸ்வரன், செயலாளர் லயன் திருமதி எஸ். இளங்கோவன், பொருளாளர் லயன் ஏ. சபாநாதன் உட்பட 29 உறுப்பினர்கள் பதவியேற்கவுள்ளனர். ((ஐ-111)

## தையல் பொருள் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 18

அரியாலை மத்தி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தையற் பயிற்சி நிலைய தையற் கண்காட்சியும் விற்பனையும் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் கனகரத்தினம் வீதியில் உள்ள நிலையத்தில் விஸ்வநாதன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக நல்லூர், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் கலந்துகொள்வார்

கண்காட்சி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறும். (ஐ)

## 20 அமைய சுகாதார தொழிலாளர் நியமனம்

திருநெல்வேலி, ஜூன் 18

அமைய சுகாதார தொழிலாளர்களை தெரிவு செய்வதற்காக கடர்த வருடம் ஒக்டோபர் மாதத்தில் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் சித்திபெற்ற 20 பேருக்கு கடந்த 16ஆம் திகதி தொடக்கம் யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலையிலுள்ள வடக்கு — கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட அனுமதியை அடுத்து யாழ். சுகாதார சேவை பிரதி மாகாண பணிப்பாளர் மேற்படி 20 பேருக்கும் அமைய சுகாதார தொழிலாளர்களாக நியமனம் வழங்கியுள்ளார். (ஐ-135)

## மெய்வல்லுநர் போட்டி

வலிகாமம் தெற்கு, ஜூன் 18

சுன்னாகம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் செல்வி டி. எஸ். கிறிஸ்தோப்பிள்ளை தலைமையில் பாடசாலை அருகே உள்ள மைதானத்தில் நடைபெறும்.

வலிகாமம் வலய பிரிவு இரண்டின் உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரனந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக சுன்னாகம் பங்குத் தந்தை அருட்திரு ஞானப்பிரகாசம் அடிகளார், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. கமலநாதன், திருமதி கமலநாதன், முன்னாள் அதிபர் அ. பதுவைநாயகம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர் (ஐ-152)

★ ★ ★

நாவற்குழி. ஜூன் 8

கைதடி மேற்கு பராசக்தி பாலர் பகல் இல்ல வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி. ப. ஒரு மணிக்கு கைதடி முத்துக் குமாரசாமி மகாவித்தியாலய மைதானத்தில் பராசக்தி பாலர் பகல் இல்லத் தலைவி திருமதி நா. நாகேந்திரம் தலைமையில் நடைபெற உள்ளது.

பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சிப் பிரிவு சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் சு. கந்தசாமியும் கௌரவ விருந்தினராக கைதடி மேற்கு கிராம உத்தியோகத்தர் சு. செல்வராசாவும் கலந்து கொள்ள உள்ளனர். (ஐ-102-74)

## உணவு பதனிடல் பயிற்சி

சுன்னாகம், ஜூன் 18

வலிகாமம் வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் உணவுப் பொருள்கள் பதனிடுதல் தொடர்பான பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளன.

பட்டினிக் கெதிரான நிறுவனத்தின் ஆதரவில் இவ் வகுப்புகள் நடத்தப்படவிருப்பதாகவும் —

இந்நிறுவனத்தால் பழமரங்களுக்கு மருந்து விசிறும் சேவையும் அளிக்கப்படுவதாகவும் —

மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-27)

## அறநெறிபாடசாலை ஆசிரியருக்கான பண்ணிசை வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 18

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் அனுசரணையுடன் யாழ் மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பண்ணிசை வகுப்பு நாளையும் நாளை மறுதினமும் காலை 9 மணி முதல் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும் பண்ணிசை வகுப்பில் ஆரம்பவிழாவில் அருளுரையை நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர ஞானசம்பந்த தேசிகபரமாசாரிய சுவாமிகள் நிகழ்த்துவார்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைக் கல்லூரி இசை விரிவுரையாளர் என். வி. எம். நவரத்தினம் கலந்து கொள்ளவுள்ளார்.

பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் சிவமகாலிங்கம் விரிவுரைகளைநடத்துவார் யாழ்.பரி. யோவான் கல்லூரி இசை ஆசிரியர் ரி. சிவஞானசேகரம், மற்றும் எஸ். ஆர். திருஞானசம்பந்தன் ஆகியோர் இசைப்பயிற்சிகளை வழங்குவார்கள். (ஐ-5)

# குடாநாட்டில் சாரணர் வேலை வாரம்

யாழ். குடாநாட்டில் சாரணர் ‘‘வேலை வாரம்’’ நாளை சனிக்கிழமை முதல் அனுஷ்டிக்கப்படுகிறது. இதனையொட்டி சாரணர் வலய உத்தியோகத்தர் மா. புவனேந்திரன் எழுதிய கட்டுரை இங்கு பிரசுரமாகுகிறது,

சாரணர்கள் மத்தியில் சேவை செய்யும் மனப்பான்மையை வளர்க்கும் நோக்கில் யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நாளை சனிக்கிழமை முதல் ஒரு வார காலத்துக்கு, சாரணர், வேலைவாரம்’’ அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அகில இலங்கை ரீதியான வேலைவாரம் கடந்த 12 ஆம் திகதி ஆரம்பமாகிய போதிலும் குடாநாட்டு சாரணர்களுக்குரிய ‘‘வேலை வார அட்டைகள்’’ காலந் தாழ்த்தியே கொழும்பிலிருந்து யாழ். எடுத்து வரப்பட்டதால் நாளை முதல் வேலைவாரத்தை அனுஷ்டிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை சாரணர் தலைமைக் காரியாலயம் இந்த வேலைவாரத்தின் போது ஒவ்வொரு சாரணர் அணிகளுக்கும் தனித்தனியே வேலை வார அட்டைகளை வழங்கும். பின்னர் அணிகள் ஒவ்வொன்றும் தத்தமது பாடசாலையைச் சேர்ந்த சூழலில் பொதுமக்களுக்குச் செய்ய வேண்டிய உதவிகளைச் செய்துகொடுப்பர்.

பின்னர் பொதுமக்கள் தம்மால் இயன்ற நிதியுதவியைச் சாரணர்களுக்கு வழங்குவதுடன் சாரணர்கள் செய்த உதவிகள் மற்றும் வேலைகள் குறித்த விவரங்களை வேலை வார அட்டையில் குறிப்பிடுவர்.

தொழிலின் மகத்துவத்தை உணரவும், உழைத்தே ஊதியம் பெற வேண்டும் என்ற மனப்பக்குவத்தை சாரணர்கள் பெற்றுக் கொள்ளவும், சேவை மூலம் சேகரிக்கப்படும் பணத்தை சாரணர் செயற்பாடுகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படல் வேண்டும் என்ற உணர்வு உருவாகவும், நேர்மையான வழிமுறைகளைப் பின்பற்றி சிக்கனமாக வாழப்பழகிக் கொள்ள வேண்டும் என்ற மனப்பக்குவம் உருவாகவும் இந்த வேலை வாரம் உதவி புரிவதாக அமைந்துள்ளது.

வேலை வாரத்தின் மூலம் சேகரிக்கப்படும் பணத்தின் ஒரு பகுதி பாசறை அமைப்பு, சாரணர் விழா, சீருடை, சின்னம் பரீட்சைகள் முதலிய செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படும்.

வேலை வாரத்தில் சாரணர்கள் ஆற்றும் சேவைகளைப் பொறுத்து அவர்களுக்கு இலங்கைச் சாரணர் தலைமைக் காரியாலயத்தால் விசேட விருதுகளும் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

★


# சௌபாக்கியா தொலைத் தொடர்பு சேவை

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
( திருநெல்வேலி வடக்கு சந்தைக்கு முன்பாக )

இரவும் பகலும் தொலைபேசித்தொடர்பு சேவையைப் பெறலாம்.

அமைதியான சூழலில், விசாலமான வீட்டில், அந்தரங்கமான அறையில் அமையப்பெற்ற தொலைபேசிச்சேவை, இரவில் தங்கவேண்டுமானால் வசதி உண்டு.

T. P, எண்: உள் நாடு: 021 - 2963
வெளி நாடு: 0094 - 021 - 2963

(66686)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சாயில் மணல் அகழ்வதால்
# கடல் அரிப்பு ஏற்படும் ஆபத்து

தென்மராட்சி, ஜூன் 18
கச்சாய் கடற்கரையை அண்டிய பகுதியில் தினமும் பெருமளவு மணல் ஏற்றிச் செல்லப்படுவதால் மாரி காலத்தில் கடல் நீர் கிராமத்திற்குள் புகும் அபாயம் ஏற்படலாமென இப் பகுதி மக்கள்அச்சம் தெரிவித்தனர்.

கட்டடங்கள் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் மணல் அள்ளுவதற்கு குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் தடை செய்யப்பட்டுள்ளதால் குடாநாட்டின் சகல பகுதிகளிலிருந்தும் தினமும் சுமார் 150 க்கு மேற்பட்ட வாகனங்களில் இங்கு மண் ஏற்றிச் செல்லப்படுவதாகவும் இந்நிலை நீடித்தால் கச்சாய்ப் பகுதி விரைவில் கடல் நீரால் சூழப்படுமெனவும் பொது மக்கள் தெரிவித்தனர்.

கச்சாய் கிராமத்தின் நலன் கருதி தென்மராட்சி பிரதேச செயலகத்தினரும்சாவகச்சேரி பிரதேச சபையினரும் இப் பகுதியில் மணல் அள்ளுவதற்குத் தடை விதிக்கவேண்டும் என அவர்கள் தெரிவித்தனர். (ஐ-117)

## பாராட்டு விழாவும் பரிசளிப்பு விழாவும்

கொக்குவில், ஜூன் 18
குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் ஏற்பாட்டில் கலாபூஷணம் ஏ. ரி. பொன்னுத்துரையின் பாராட்டு விழாவும் தனிநடிப்புப் போட்டிப் பரிசளிப்பு விழாவும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்களாக வலிகாமம் வலய கல்வி அபிவிருத்தி உதவிக்கல்விப் பணிப்பாளர் கோகிலா மகேந்திரன் யாழ்.பல்கலைக் கழக வருகை விரிவுரையாளரும் சட்டத்தரணியுமானபொன்.பூலோகசிங்கம், சுன்னாகம் இலங்கை வங்கிமுகாமையாளர் சி.விக்னராஜா, காங்கேசன்துறை இலங்கை வங்கி முகாமையாளர் ந.சிவரத்தினம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளார்கள். (க-69-15)

## பெண் மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 18
உடல்பூராகவும் தீப்பற்றி எரிந்தநிலையில் கடந்த 10ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பெண் நேற்று அங்கு மரணமானார்.

பருத்தித்துறை பூதராயர் கோயிலடிப் பகுதியைச் சேர்ந்த தங்கத்துரை சாரதாவேணி (வயது 53) என்பவரே மரணமானவராவார்.

சடலம் மரண விசாரணையின் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது. (இ-15)

## வீதி புனரமைப்பு

அரியாலை, ஜூன் 18
பாஷையூர் பிரதான வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது.

போக்குவரத்து செய்யமுடியாதளவுக்கு நீண்டகாலமாக குண்டும் குழியுமாகக் காணப்பட்ட இவ் வீதியை யாழ் மாநகராட்சி மன்றம் தற்போது புனரமைத்து வருகின்றது. (ஐ-17)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 18
யாழ். பாலர் கல்விக்கழக விக்னேஸ்வரா பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு திருமதி ஸ்ரீதரன் சிவானந்தராணி தலைமையில் கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலை வைத்திய அதிகாரி டாக்டர் ந. சர்வானந்தாவும் சிறப்பு விருந்தினர்களாக சங்கானை ஆர். டி. ஓ. தா. தியாகமூர்த்தி, கோண்டாவில் மேற்கு கிராம உத்தியோகத்தர் செ. சிறீஸ்கந்தராசா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக மில்க்வைற் தொழிலக அதிபர் இ. நவகோபால், பாலர் கல்விக்கழகச் செயலாளர் தெ. இரத்தினகோபால் ஆகியோரும் கலந்து கொள்வர். (இ-ரி)

# வயிற்றில் இருந்த பற்கள் 37 ஆண்டுகளின் பின் மீட்பு

37 வருடங்களுக்குப் பின் ஒருவரது வயிற்றினுள் இருந்த கட்டுப்பற்கள் சத்திர சிகிச்சையின் மூலம் அப்புறப்படுத்தப்பட்டன.

இச் சம்பவம் லண்டனில் இடம்பெற்றது.

பிளன்டேர்ஸ் [வயது 52] என்பவர் வயிற்று வலியால் அவஸ்தைப்பட்ட போது மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். மருத்துவ மனையில் அவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொண்ட மருத்துவர்கள் அவரது வயிற்று வலிக்குக் காரணமான கட்டுப்பற்களை அப்புறப்படுத்தினர்.

1961 ஆம் ஆண்டு கார் விபத்து ஒன்றில் பிளன்டேர்ஸ் தனது பற்களை இழந்து போலிப் பற்களைப் பொருத்திக் கொண்டார். தவறுதலாக அவர் அப் பற்களை விழுங்கி விட்டார் என்றும் கூறப்படுகின்றது.

37 வருடங்களாக வயிற்றில் இருந்த பற்கள் தற்போது அவருக்கு வயிற்று வலியைத் தோற்றுவித்தமை மருத்துவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது [ஐ-5]

# இராணுவ சந்தேக நபர்கள் ஐவர் நீதிமன்றில் மனு

யாழ்ப்பாணம், ஜூன் 18
இளைஞர் ஒருவரின் மரணம் தொடர்பாக வெளி மாவட்டங்களுக்கு செல்வதற்கு யாழ். நீதிமன்றத்தினால் தடை விதிக்கப்பட்ட ஐந்து இராணுவ சந்தேகநபர்கள் தென்பகுதியிலுள்ள தமது சொந்த இடங்களுக்குச் சென்றுவர அனுமதிகோரி யாழ். நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனு மீதான விசாரணை இன்று மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் யாழ். நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது.

1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15 ஆம் திகதி படையினரால் கைதுசெய்யப்பட்டு உரும்பிராய் இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இதே இடத்தைச் சேர்ந்த சரவணமுத்து உதயகுமார் என்பவர் மரணமானார்.

இவரது மரணம் தொடர்பாக மேற்படி முகாமில் கடமையாற்றிய அப்துல் பசீர் மொகமட் ராஸிக், வி. எச். சுனில்பிரேமசிறி, பி. பிரசாந்த பிரியலால், என்.வி.பி. சந்தரஜித் குணவர்த்தன, எம்.பி. மொகமட் நவாஸ் ஆகியோர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட பின்னர் யாழ்.மாவட்டத்தை விட்டு வெளியே செல்லக் கூடாது என்ற நிபந்தனையுடன் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

தற்பொழுது தமது சொந்த இடங்களுக்குச் சென்றுவர அனுமதி கோரியே இவர்கள் மனுத் தாக்கல் செய்துள்ளனர். (இ-5-ரி)

## குண்டு வெடிப்பு

கொழும்பு, ஜூன் 18
கொழும்பில் இருந்து பதுளை நோக்கிச் சென்றுகொண்டிருந்த போக்குவரத்துச்சபை பஸ் ஒன்று தலாப்பிட்டியவில் சென்றுகொண்டிருந்த சமயம் பஸ்ஸுக்குள் குண்டு ஒன்று வெடித்தது. இதில் நால்வர் காயமடைந்தனர். (இ-3)

## வலி. வடக்கில்
# 62 ஹெக்ரேயரில் சிறுபோகச் செய்கை

சுன்னாகம், ஜூன் 18
வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் இம்முறை 62 ஹெக்ரேயர் பரப்பளவில் சிறுபோக பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றில் 20 ஹெக்ரேயர் பரப்பளவில் சின்னவெங்காயமும், ஆறு ஹெக்ரேயரில் பயறும், 8 ஹெக்ரேயரில் இராசவள்ளி, மோதகவள்ளி ஆகியனவும் ஏனைய மரக்கறிகள் இதர பரப்பளவிலும் செய்கை பண்ணப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-27)

## சாந்திகம் நடத்தும் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 18
சாந்திகம் உளவளத் துணை நிலையம் நடத்தும் மாதாந்தக் கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சச்சேரி, நல்லூர் வீதியில் உள்ள மேற்படி நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

திருமதி ஜெனோவா அல்பிரட் ''சிறுவர் உரிமை'' பற்றி கருத்துரைவழங்குவார் (இ-7)

## உலர் உணவு விநியோகம் ஆரம்பம்

அரியாலை, ஜூன் 18
யாழ். பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்தோருக்கான 75 ஆவது 'ஏ' 'பி' உலர் உணவு முத்திரைப் புள்ளிகளுக்கு பொருள்கள் விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகள் ஊடாக இடம்பெயர்ந்தோருக்கு பொருள்கள் வழங்கும் முகமாக நிவாரணப் பொருள்கள் கிளைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை—
மேற்படி சங்கத்தின் சில கிளைகளில் உணவு முத்திரைகள் [illegible] (பையான பரிசீலனையின் பின்னரே பொருள்கள் வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டு வருகின்றது.

புதிய உலர் உணவு முத்திரைகள் விநியோகத்தில் முறைகேடுகள் இடம்பெற்றிருக்கின்றனவா என்பதைக் கண்டறியவே இந்த மீளாய்வுப் பணியை யாழ், பிரதேச செயலகம் மேற்கொண்டு வருகின்றது. (ஐ-17-30)

## திருமறைக் கலாமன்ற கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 18
திருமறைக் கலாமன்றத்தினால் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் நடத்தப்பட்டு வரும் கருத்தரங்கில் நாளை சனிக்கிழமை ''இலக்கியம் பயிலுவதன் நோக்கம்'' என்ற தலைப்பில் இரா. செல்வவடிவேல் கருத்துரை வழங்குவார். [இ-7]

## சதுரங்க சுற்றுப்போட்டி பரிசளிப்பு

யாழ் ஹற்றன் நஷனல் வங்கியின் ஆதரவுடன் யாழ் இந்துக் கல்லூரி சதுரங்கக் கழகம் குடாநாட்டுப் பாடசாலை தனிநபர் அணிகளுக்கிடையில் நடத்திய வருடாந்த சதுரங்க சுற்றுப் போட்டியின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு கலந்து கொள்வார். [இ-7]

# புலமைசார் நிபுணர்கள் வெளியேற்றம் எமது மாணவ சமூகத்துக்குப் பேரிழப்பு

## துணைவேந்தர் உரை

சுன்னாகம், ஜூன் 18
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்று மேற்படிப்பு வசதிகளுடன் வெளிநாடுகளுக்குச்செல்பவர்களில்ஒரு பகுதியினர் இங்கு வருவதில்லை. புலமைசார் நிபுணர்கள் இவ்வாறு வராது போகும் சம்பவங்கள் எமது மாணவ சமூகத்துக்குப் பெரும் பாதிப்புத் தருவதாகும்.

இவ்வாறு யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்தார்.

பல்கலைக்கழக வெள்ளி விழா முன்னோடி நிகழ்ச்சிகளின் ஆரம்ப நாள் நிகழ்ச்சிகள் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற போது, அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்றுவரை தொடர்ந்து பிரச்சினைகள், நெருக்கடிகள் மத்தியில், அவற்றுக்கு முகம் கொடுத்து இயங்கி வருகிறது.

1987 இல் இந்தியா இராணுவ நடவடிக்கை, 1995 இல் மாபெரும் இடப்பெயர்வு என்ற இரு பெரிய பிரச்சினைகளையும்,, 83 இனக் கலவரம் போன்று அடிக்கடி நடக்கும் பிரச்சினைகளையும் எதிர்கொண்டு நல்ல முறையில் எமது பல்கலைக் கழகம் இயங்கி வருகிறது.

தென்னிலங்கையிலும்சரி, வேறு பல நாடுகளிலும் சரி பெருந்தொகைப் பணத்தை முதலிட்டும் அங்குள்ள பல்கலைக் கழகங்கள் நல்ல பயனைத் தரவில்லை. எமது வெள்ளிவிழாவை ஒட்டியதாக இரு பீடங்கள் எமக்குக் கிடைத்துள்ளன. வர்த்தக முகாமைத்துவ பீடம், பட்டதாரிகள் பீடம் ஆகியவையே அவையாகும். இதைவிட இயற்கை விஞ்ஞான 'பிரிவு' (Natural Science Block) கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

உலகம் வளர்ந்து முன்னேறிச் செல்கிறது. அடுத்த நூற்றாண்டின் வளர்ச்சியோடு எமது பல்கலைக்கழகத்தை வளர்த்தெடுக்க வேண்டியது பற்றி நாங்கள் இந்த ஆண்டில் அதிகம் கலந்துரையாட வேண்டியுள்ளது.

எம்மிடம் பட்டம் பெற்ற ஒரு பகுதியினர் மேற்படிப்புக்காகச் சென்ற பின் இங்கு வருவதில்லை. தென்னிலங்கையில் இருந்து நிபுணத்துவம் பெற்றவர்களை இங்கு அழைப்பது இயலாத காரியம். எனவே, இங்கேயே நாம் துறைசார்ந்தவர்களைப் பயிற்றுவிப்பது அவசியமாகும்.

மறைந்த துணைவேந்தர் பேராசிரியர் துரைராஜா இங்கு பொறியியல் பீடத்தை நிறுவ முயன்றார். அது இன்னும் நிறைவேறவில்லை. அரசியல் பக்கபலத்துடன் பெரும் நிதி வளத்துடன் மேற்கொள்ள வேண்டிய காரியமாக இது உள்ளது. இது விரைவில் நிறைவேறும் என நம்பலாம்.

கடந்த காலத்தில் நாம் செய்த சாதனைகளையும், விட்ட தவறுகளையும் நினைவு கூருவதுடன் அடுத்த 24 ஆண்டுகளில் நாம் செய்ய வேண்டியவை பற்றிச் சிந்திப்பதும் அவசியமான தேவையாகும் — இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வாழ்த்துரையை பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் அ. சோமசுந்தரம் பிள்ளை நிகழ்த்தினார்.

தொடர்ந்து கலாநிதி க. குணராசா தலைமையில் 'ஈழத்து இலக்கியம்' பற்றிய இயல் அரங்கும், நாட்டார் இசை மாலை நிகழ்ச்சியும் இடம்பெற்றன. (ஐ-27)


# யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

22, இராமையா செட்டியார் வீதி,
(சாந்தி சினிமா முன்பாக, மேல்மாடியில்)
யாழ்ப்பாணம்.

போட்டிப் பரீட்சைகளில் தோற்றுபவர்களுக்கான

## கருத்தரங்கு

விடயம்:
I. விளையாட்டுத்துறை சார்ந்த விடயங்கள்
II. நுண்ணறிவு

காலம்:
பிரிவு I: 19-06-99 சனிக்கிழமை மு. ப, 9.00 மணி
பிரிவு II: 19-06-99 சனிக்கிழமை பி. ப, 2.00 மணி

– நிர்வாகி

[66711]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 சடலங்கள் நேற்று ஆஸ்பத்திரியில் கையளிப்பு

பளைப் பகுதியில் இடம் பெற்ற மோதல் ஒன்றில் கொல்லப்பட்டதாகக் கூறப் படும் மூன்று இளைஞர்களினது சடலங்கள் நேற்று முன்தினம் பளைப் பொலிஸாரினால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டன.

கடந்த புதன்கிழமை இப் பகுதியில் இராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதலிலேயே இந்த மூன்று இளைஞர்களும் கொல்லப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

மூன்று சடலங்களிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன.

மரணவிசாரணையின் பொருட்டும், அடையாளம் காண்பதற்காகவும் இந்தச் சடலங்கள் யாழ் போதனா வைத்திபசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. (இ-139-5-15)

## 2 எலும்புக்...

(முதலாம் பக்கத் தொடர்)

நேற்று முன்தினம் செம்மணிக்கு அழைத்து வரப்பட்டது தெரிந்ததே.

அவர் அங்கு அடையாளம் காட்டிய இடத்தில் தோண்டும் பணி நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அன்று மாலை நிறுத்தப்பட்ட பணி நேற்றுக்காலை 9.00 மணிக்கு யாழ். மேலதிக நீதிவான் எம். இளஞ்செழியன் முன் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

சர்வதேச, உள்ளூர் அமைப்புப் பிரதிநிதிகள் முன்னிலையில் நேற்று இடம்பெற்ற இந்த தோண்டும் பணியில் பிற்பகல் 2 மணியளவில் இரு எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

நேராகப் படுத்தவாறு இருந்த ஒரு எலும்புக்கூட்டையும் பக்கப்பாட்டில் படுத்தவாறு இருந்த மற்ற எலும்புக்கூட்டையும் நிபுணர்கள் பகுதி பகுதியாக மீட்டு கறுப்புப் பொலீத்தீனில் வைத்தனர்.

எலும்புக் கூடுகளை ஆய்வுக்கு உட்படுத்த வசதியாக அவை மிக அவதானமாக மீட்கப்பட்டன.

இரு எலும்புக்கூடுகளும் மீட்கப்பட்டதுடன் பணி நிறுத்தப்பட்டது. (இ-3-6)

## எலும்புக்...

(முதலாம் பக்கத் தொடர்)

இவ்வாறு றுகுணு பல்கலைக் கழக சட்ட மருத்துவத்துறைப் பேராசிரியர் சந்திரசிறி நெரியல்ல தெரிவித்தார்.

செம்மணியில் புதைகுழி தோண்டும் பணி முடிவடைந்த பின்னர் அங்குநடந்த செய்தியாளர் மாநாட்டில் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மீட்கப்பட்ட இரு எலும்புக் கூடுகளுக்கு உரியவர்கள் ஆணா அல்லது பெண்ணா அவர்களது வயது என்பன குறித்தும், அவர்கள் எப்போது கொல்லப்பட்டார்கள் என்பது குறித்தும் இப்போது எதுவும் கூறமுடியாதுள்ளது. மீட்கப்பட்ட எலும்புகளை ஆய்வு செய்வதன் மூலமே அந்த விவரங்களை வெளியிட முடியும்.

மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளில் ஒன்றில் கைகள் இரண்டும் கட்டப்பட்டிருந்தன. கண்கள் மூடிக்கட்டப் பட்டிருந்தன. மற்ற எலும்புக் கூடு சேதம் அடைந்திருந்ததால் கைகள், கண்கள் கட்டப்பட்டிருந்தனவா என்பதை அறிய முடியவில்லை.

உரிய ஆய்வுகளை நடத்திய பின்னரே அது பற்றிய திட்டவட்டமான முடிவுகளை வெளியிட முடியும்.

கண்கள், கைகள் கட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட எலும்புக் கூட்டின் மண்டை ஓட்டுப் பகுதியில் ஆழமாகக் காணப்படும் சிதைவுகள் அடித்துத் தாக்கப்பட்டதால் ஏற்பட்டவையாக இருக்கக் கூடும். அத்துடன் இரண்டு எலும்புக் கூட்டிலும் அடி காயங்கள் காணப்பட்டன.

ஒரு எலும்புக்கூடு நிமிர்ந்து படுத்திருப்பது போன்றும், மற்றையது பக்கப்பாட்டில் படுத்திருப்பது போன்றும் இருந்தன இரண்டு எலும்புகூடுகளுக்கும் இடையில் சிலிப்பர் கட்டைகள் காணப்பட்டன.

எலும்புக் கூடுகள் முழுமையாக ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படும். அப்போதே உண்மையான விடயங்களை அறிய முடியும் — இப்படி அவர் கூறினார். (இ-3-6)


# பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 2001**

பொருளியல்
S. வரதராஜன்

**கேள்வி – நிரம்பல்**

மாணவர்களின் நன்மை கருதி இரு பிரிவுகளாக நடைபெறுகின்றன.

பிரிவு - I
சனி, ஞாயிறு 11 - 12 மணி

பிரிவு - II
சனி, ஞாயிறு 7 — 8 மணி

**ஆரம்பம்:**
**19 – 06 – 99 சனி**

★ தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.

(சி/7933)


## அத்தியாவசிய...

(முதலாம் பக்கத் தொடர்)

விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இதனை அறிவித்துள்ளார்.

அரசாங்க மருந்துவர்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் வேலை நிறுத்தம் காரணமாக நாட்டின்பல் வேறுபகுதிகளிலும் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகள் செயல் இழந்திருப்பது தெரிந்ததே.

## குற்றம்...

(முதலாம் பக்கத் தொடர்)

கொட்டக்கொட தெரிவித்தார்.

செம்மணியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நேற்று முன்தினம் 12-00 மணிக்கு ஆரம்பமான முதலாம்கட்ட தோண்டுதல் பணி நேற்றுப் பிற்பகல் பூர்த்தியானது. இந்த தோண்டுதலில் இரு எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

செம்மணியில் புதைகுழி இருக்கும் இடங்கள் எல்லாவற்றையும் காட்டுமாறு சோமரத்தின ராஜபக்ஷவிடம் நீதிவான் கேட்டார்.

ஆனால் அவர் ஒரு புதைகுழியை மட்டுமே காட்டினார்.

அந்தப் புதைகுழியில் இரு சடலங்கள் இருப்பதாகக் கூறினார். அதன்படி அவை மீட்கப்பட்டன.

புதைகுழியில் புதைக்கப்பட்ட இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த இருவரின் பெயர்களையும் ராஜபக்ஷ தெரிவித்தார். ஆனால் தற்போதுள்ள நிலையில் அவர்களது பெயர் விவரங்களை வெளியிட முடியாதுள்ளது.

அவர்களின் பெயரை தெரிவித்தால் இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் யாவும் பாதிக்கப்பட்டுவிடும்.

இந்த எலும்புக் கூடுகளை ஆய்வுக்கு உட்படுத்துவதன் மூலம் எதிர்கால தோண்டுதல் பணியை விரைவாக்க முடியும்.

இந்த எலும்புக்கூடுகள் மூலம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும், நிபுணர்களும் ஆய்வுகளை மேற்கொண்டு பணி தொடர உதவுவர்.


இந்தப்பிரதேசத்தில் மனித புதைகுழிகள் மேலும் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். மேலும் விசாரணை செய்வதன் மூலமே இதனை அறிய முடியும்.

சோமரத்ன ராஜபக்ஷ புதைகுழிகள் தொடர்பாக எந்தக் கட்டத்தில் அறிந்தார் என்பது குறித்து விசாரிக்க வேண்டும். இது தொடர்பாக ராஜபக்ஷவை விசாரிக்க நீதிவான் அனுமதி வழங்கியுள்ளார்,

அத்துடன் இந்தப் பணியை மேற்கொள்ள வடக்குப் படையின் உயர் அதிகாரிகள் முழு ஆதரவையும் வழங்கினர். பொலீஸாரும் நல்ல ஆதரவு நல்கினர்—என்றார் அவர். (இ-3-6)



செம்மணி புதைகுழி தோண்டப்பட்டதை அடுத்து அங்கு நடந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அரச சட்டத்தரணி யசந்த கொட்டக்கொட, குற்றப் புலனாய்வுத்துறைப் பணிப்பாளர் கீர்த்தி கஜநாயக்க, சட்ட மருத்துவத்துறை நிபுணர் நெரியல்ல ஆகியோரைப் படத்தில் காணலாம்.



செம்மணியில் இரு எலும்புக்கூடுகள் மீட்கப்பட்ட புதைகுழியைக் காணலாம்.

## இ. தொ. கா...

(முதலாம் பக்கத் தொடர்)

செய்யப்பட்டுள்ளது.

இ. தொ. கா. நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜனும், மேல் மாகாண சபை அங்கத்தவரான மனோ கணேசனும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவுடன் நடத்திய பேச்சுக்களின்போது அளிக்கப்பட்ட உறுதிமொழிகளை அடுத்து இந்தப் பேரணி ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம் —

தேசிய தீவிரவாதிகள் எதிரணி என்ற அமைப்பின் பெயரில் இ. தொ. காவுக்கு எதிரான துண்டுப் பிரசுரங்கள் மும்மொழியிலும் நேற்று கொழும்பு நகரில் விநியோகிக்கப்பட்டன, (இ-3-7)

# அனலைதீவில் கரை ஒதுங்கிய சடலம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

அனலைதீவுப் பகுதியில் நேற்று ஆண் ஒருவருடைய சடலம் உருக்குலைந்த நிலையில் கரை ஒதுங்கியது.

ஊர்காவற்றுறை நீதிமன்றத்துக்கு இது குறித்து ஊர்காவற்றுறை பொலீஸார் அறிவித்ததைத் தொடர்ந்து அந்த இடத்துக்குச் சென்று மரண விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார். (இ-15-139-5)

## 2 பொலீஸ்...

(முதலாம் பக்கத் தொடர்)

தாக்குதலை நடத்தியது என்றும்—

தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது இடம் பெற்ற துப்பாக்கிப்பிரயோகத்தில் 7 வயதுச் சிறுவன் ஒருவன் உட்பட 2 பேர் காயமடைந்தனர் எனவும் மட்டக்களப்புச் செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளால் ரி 56 ரக துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. [இ-7-21]

## மீட்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்)

அவற்றைப் பார்வையிட்டு இனங்காண உதவவேண்டும் என்றும் நீதிவான் கேட்டுக் கொண்டார்,

அதன் பின்னர் எலும்புக் கூடுகள் காலி றுகுணு பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு எடுத்துச் செல்லப் பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்படும் எனத்தெரிவிக்கப்பட்டது.


# NIRU Tuition Centre

KONDAVIL

A/L 2001 CHEMISTRY

பொது இரசாயனம்

ஆரம்பம் 19–06—99 (சனி 4. 30 P. M)

ஆசிரியர்

திரு. N. மகேஸ்வரன் (66712)


## மழை காலத்துக்கு..

(முதலாம் பக்கத் தொடர்)

சோதகர் ஆனந்த மெண்டிஸ் ஆகியோர் தமது அறிக்கைகளை இருவாரங்களில் சமர்ப்பிப்பதாக நீதிவானிடம் தெரிவித்தனர்.

இதனை அடுத்து அறிக்கைகளை மன்னார் நீதிமன்றத்தில் அடுத்த மாதம் 15 ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் தோண்டும் பணியை மீண்டும் எப்போது ஆரம்பிப்பது என்பது குறித்து அங்கு வைத்து அறிவிப்பதாகத் தெரிவித்தார்.

புதைகுழி தோண்டும்பணி விஞ்ஞான ரீதியாக மேற்கொள்ளப்படுவதால் நிபுணத்துவ ஆலோசனை பெறவேண்டியுள்ளது. ஆகவே அவர்களின் நேரத்தைப்பொறுத்தே தோண்டும்பணியை ஆரம்பிக்கமுடியும் என்று நீதிவான் குறிப்பிட்டார்.

இந்த வழக்குக்காக யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்ட கிருஷாந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட சோமரத்தின ராஜபக்ஷவை அவரது சிறைச் சாலைக்கு அனுப்புமாறு சிறைச்சாலை ஆணையாளருக்கு உத்தரவிட்ட நீதிபதி மீண்டும் புதைகுழி தோண்டும் திகதி அறிவிக்கப் படும்போது அந்தத் திகதியில் அவரை இங்கு ஆஜர் செய்யவேண்டும்என்று உத்தரவிட்டார்.

சோமரத்தின ராஜபக்ஷ நீதிமன்றத்தில் அளித்த வாக்கு மூலத்தில் தாம் பத்து இடங்களையும், தம்மோடு மரண தண்டனை விதிக்கப்பட்ட மற்றொரு கைதி ஐந்து இடங்களையும்,இன்னொரு கைதி மேலும் சில இடங்களையும் அடையாளம் காட்டத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

சகல புதைகுழிகளையும் தோண்ட ஏற்பாடு செய்யவேண்டும் என்று காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி க. கேசவன் கோரிக்கை ஒன்றை மன்றில் சமர்ப்பித்தார்,

செம்மணி தொடர்பாகத் தகவல் தெரிவிக்க முன்வந்த கைதிகளின் தகவல்கள் அனைத்தையும் கவனத்தில் எடுத்து முழு விசாரணைப் பொறுப்பையும் ஏற்று தோண்டுதல் பணியை நீதிமன்றம் கண்காணித்து முன்னெடுக்கும் என்று நீதிவான் இளஞ்செழியன் தெரிவித்தார்.

இந்த முதல் கட்டப் பணியை மேற்கொள்ளப் பொலீஸாரும், இராணுவத்தினரும், நிபுணர்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் அளித்த ஆதரவுக்கு நீதிவான் நன்றி தெரிவித்தார். (இ-3-6)


# விற்பனையாகின்றது

அதிபர்களுக்கான போட்டிப் பரீட்சை கைந்நூல்

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

இல. 4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(66709)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361, ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18- 06- 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org